

# திறவுகோல்

கார்த்திகை 2048 / மாத இதழ்

18+

இராசாதிராச சதுர்வேதி மங்கலம் என்கிற மன்னார்குடி

நீலப்படம்

மன்னையும் மீத்தேனும்

மாமழை போற்றுவோம்

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் குழு

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
## பாகம் - தொலைக்காட்சி தலைமுறை



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

வாய மூடு எப்ப பாத்தாலும் கிழவன் / கிழவி மாதிரி பேசிகிட்டு என்பது போன்ற வசைகளை நாம் கேட்டிருப்போம். இவ்வாறான வசைகளை கேட்டு பேச்சை குறைத்திருப்போம் அல்லது மீண்டும் மீண்டும் அவ்வாறு பேசியிருப்போம். ஆனால் ஒருமுறையேனும் எதனால் இப்படி சொல்கிறார்கள், அதனுள் பொதிந்துள்ள அர்த்தம் என்ன என்பதை நாம் யோசித்திருப்போமா? யோசித்திருந்தால் ஓர் வாழ்வியல் பாடம் நமக்கு கிடைத்திருக்கும். யோசிப்பதற்கு தான் நமக்கு நேரமில்லையே. நம்முடைய ஓய்வு நேரத்தை தான் தொலைக்காட்சி கவ்வி கொண்டு நம்மை சிந்திக்க விடாமல் அது தரும் தகவல்களால் நம்மை ஆக்கிரமித்து விடுகின்றவே.

ஆக்கிரமிப்பு என்பது ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது படையெடுத்து ஆக்கிரமிப்பது மட்டுமல்ல, மாறாக ஒரு மாயையை உருவாக்கி உளவியல் ரீதியாக நம்மை ஆட்கொள்வதும் ஆக்கிரமிப்பு தான். இந்த ஆக்கிரமிப்பை தான் தொலைக்காட்சி தற்பொழுது செய்து கொண்டிருக்கிறது. நமக்கு கிடைக்கும் கொஞ்ச நேரத்தையும் நிஜ உலகுக்கு அப்பாற்பட்ட மெய்நிகர் (Virtual World) உலகில் கழித்துக் கொண்டிருக்கிறோம். இந்த மெய்நிகர் உலகத்தில் வசிக்க தொலைக்காட்சி நமக்கு போதுமானவையாக இருக்கிறது. குடும்பத்துடன் சிறிது நேரம் முகம் பார்த்து பேச இயலாத நாம் தொலைக்காட்சியின் முன் மணி கணக்கில் உட்கார்ந்திருக்கிறோம். இன்னும் விளங்க சொல்ல வேண்டுமாயின் தன் மனைவியுடனான உறவில் மகிழ்ச்சி கொள்ளாமல் நீல படத்தை பார்த்து திருப்தி கொள்வதை போன்று. இப்படி மெய்நிகர் உலகில் வசிக்க பழகுவதால் நாளடைவில் நிஜ உலகை எதிர்கொள்ள இயலாமல் தனிமையும் சோகமும் வாட்ட நிலைகுலைந்து போய்விடுகிறோம்.

நம் குடும்பத்திலோ அல்லது அண்டை வீடுகளிலோ நம் கண் எதிரே யாராவது ஒருவர் தொடர்ந்து சீண்டப்படுவதும், புறக்கணிக்கப்படுவதன் மூலம் அவர்களுக்கு ஓர் மன இறுக்கத்தை கொடுத்து அவர்களை தனிமைப்படுத்தும் செயல்கள் தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கும். அவற்றை கண்டு நாம் கடந்து சென்றிருப்போம். அதே நேரத்தில் நமக்கு நேரடி அறிமுகம் இல்லாத எந்த ஒரு பந்தமும் இல்லாத ஓவியாவிற்கு பிக் பாஸ் நிகழ்ச்சியில் அதேபோல் நெருக்கடி நடக்கும் பொழுது அவருக்காக வருத்தப்பட்டும், எதிர்வினை ஆற்றியும், வாக்களித்தும், பார்ப்பவர்களிடமெல்லாம் அவரை பற்றியும் பேசி கொண்டிருப்போம்.

எப்படி சாத்தியம் ஆகிற்று இது. நாம் தினமும் நேரடியாக பார்க்கும் ஒருவருக்காக வருத்தப்பட இயலாத நம்மால் தொலைக்காட்சி வழி பார்த்த ஓவியாவிற்க்காக வருத்தப்பட இயல்கிறது. அது தான் நம்மை அறியாமலே நம் மீது தொடுக்கப்பட்டுள்ள உளவியல் ஆக்கிரமிப்பு. தொலைக்காட்சியோ இணையமோ உணர்வுகளை உணர்ச்சிகளாக்கி நம்மை எதிர்வினை ஆற்ற செய்திடுகின்றன.

தொலைக்காட்சி ஒரு பிரமாண்டமான பொது ஊடகம். அதற்கு பலகோடி பார்வையாளர்களை திருப்திப்படுத்த வேண்டிய சூழல் உள்ளது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரசனை இருக்கும். தொலைக்காட்சியால் அனைவரின் ரசனையையும் ஈடு செய்ய இயலாது. பொதுவான சராசரியான நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதன் மூலம் நம்முடைய ரசனையையும் சராசரியாக்கி விடுகின்றனர். அந்த சராசரி நிகழ்ச்சியை உச்சகட்ட விளம்பரம் மூலம் அனைவரையும் பார்க்க வைத்து விடுகின்றனர். குறிப்பாக இது குழந்தைகளுக்கு மிக ஆபத்தானது. அந்த வயதில் தான் அவர்கள் தன்னுடைய தனித்தன்மையை கண்டறிந்து அதனை வளர்த்து கொள்ள இயலும் மாறாக இந்த சராசரி நிகழ்ச்சிகளில் மூழ்கி சராசரி அறிதல்களிலும் சராசரி ரசனைகளிலும் சிக்கி கொண்டு சராசரியாகி விடுகின்றனர்.

குறிப்பாக 90களுக்கு பிறகு பிறந்தவர்கள் அனைவரும் தொலைக்காட்சி வழியே உலகத்தை கண்டவர்கள். அவர்கள் அனைத்தையும் காட்சி மொழியிலேயே உள்வாங்கி வளர்ந்தவர்கள். காட்சி மொழியில் உள்வாங்கும் பொழுது மொழியின் வழி சிந்தனை தடைப்பட்டு போகிறது. மொழிவழிக் கல்வி தான் மூளையின் இயல்பான செயல்பாடு. நாம் அறிந்தவற்றை நினைப்பதும் நம் மொழியில்தான். மொழியின் வழியில் தான் நம் சிந்தனை நிகழ்கிறது. காட்சி ஊடகங்கள் மொழித்திறனையே அழிக்கின்றன. மொழியில் நுழைந்து தன் சொந்த திறனைக் கண்டடைய வேண்டிய காலகட்டத்தில் குழந்தை இந்தக் காட்சி ஊடகங்களில் நுழைவதனால் அது அனைத்தையும் சிந்திக்க இயலாமல் வளர்கிறது.

நம் குழந்தைகள் பள்ளிக்கு செல்லும் முன் சுமார் 3000 மணி நேரம் தொலைக்காட்சி பார்ப்பதாக ஓர் ஆய்வு கூறுகிறது. இந்த 3000 மணி நேரத்தில் ஒரு கல்லூரி படிப்பையே நம்மால் முடித்து விட இயலும். இப்படி குழந்தைகள் வளரும் பருவத்தில் தொடர்ந்து தொலைக்காட்சி பார்ப்பதால் உடல் ரீதியான பிரச்சனைகள் ஏற்படும் அதே நேரத்தில் நமக்கே தெரியாமல் மன ரீதியான பிரச்சனைகளுக்கும் உள்ளாகின்றனர். சிந்தனை வளர்ச்சியடையாமை மற்றும் பிறரோடு தொடர்பு கொள்ளும் திறன் குறைந்து மற்றவர்களுடன் பேசும் வாய்ப்புகள் அருகி விடுகின்றன. இப்படி வளர்ந்த குழந்தை பின் ஏற்படும் சமூக சிக்கல்களை தீர்க்க இயலாமல் திண்டாடுகின்றது. இதன் மூலம் மாணவர்களின் தற்கொலையும் அதிகரித்துள்ளன. அவர்களின் பிரச்சனையை பேசுவதற்கும், அதனை விவாதிப்பதற்கும் தயங்கி அதனை எதிர் கொள்ள இயலாமல் தன்னையே மாய்த்துக் கொள்கின்றனர்.

உயிரியல் ரீதியாக, நரம்புத் தொடர்பிணைப்புப் பொருளான செரோடோன் ஒரு நியூரானிலிருந்து மற்றொரு நியூரானுக்கு சமிக்ஞைகளை அனுப்புவதன் மூலம் தற்கொலை எண்ணங்களை தூண்டுவதாகவும் இந்த சமிக்கை தூண்டலுக்கு முக்கிய காரணம் பிரச்சனைகளை அடக்கி வைத்து யாருடனும் பேசாமல் இருப்பதால் ஏற்படும் மன அழுத்தமே என்றும், உரையாடல் குறைந்ததற்கு தொலைக்காட்சி, இணையம் போன்ற இயந்திரத்துடன் இயைந்த வாழ்க்கை முறையே காரணம் என்கின்றனர் மருத்துவர்கள். இந்தியாவில் மாணவ தற்கொலைகள் அதிகம் இருக்கும் மாநிலங்கள் தமிழகம், மகாராஷ்டிரா, கர்நாடகா என்கிறது புள்ளிவிவரங்கள். இந்த மாநிலங்கள் தான் இந்தியாவில் முன்னேறிய மாநிலங்களாகவும் இருக்கின்றன என்பது தான் முரண். இதே மாநிலங்கள் தான் டெம் (Television Audience Measurement) எண்ணிக்கையில் இந்தியாவில் முன்னனியில் உள்ளன அதாவது அதிக தொலைக்காட்சி பார்வையாளர்கள் கொண்ட மாநிலங்கள்.

90-91 காலகட்டம் இந்தியாவில் மிக பெரிய மாற்றங்களை ஏற்படுத்திய காலகட்டம். வளைகுடா போரின் செய்திகளை பார்ப்பதற்காகவே அக்கால கட்டத்தில் அதிகமான தொலைக்காட்சிகளை தங்கள் வீடுகளில் மக்கள் வாங்க ஆரம்பித்தனர். அதன் பின் இந்தியா வாரி அணைத்து கொண்ட உலகமயமாக்கல் மூலம் அனைத்து நிறுவனங்களின் பொருட்களும் இந்தியாவில் விற்பனைக்கு வந்து அதற்கான கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் மக்களை நுகர்வோராகவும் நாட்டை சந்தையாகவும், தொலைக்காட்சியின் வழியே மாற்றிய காலகட்டம். இது தான் இந்திய தொலைக்காட்சி யுகத்தின் மாபெரும் பாய்ச்சல் ஆரம்பித்த காலகட்டம். விளம்பரங்களால் ஈர்க்கப்பட்ட மக்கள் வாங்கி குவித்த பொருட்கள் அனைத்து வீட்டையும் அடைத்து கொள்ள ஆரம்பித்தன. இதில் என்ன ஆச்சர்யம் எனில் தன்னுடைய மொத்த சேமிப்பை கரைக்கும் அப்பொருட்கள் நமக்கு தேவையா என சிந்திக்க கூட வழியில்லாமல் நாம் சகட்டு மேனிக்கு வாங்கி குவித்துக் கொண்டிருக்கிறோம்.

வேண்டுமானால் நீங்கள் உங்கள் வீட்டில் உள்ள பொருட்களை ஆராயுங்கள் அவற்றில் சுமார் 50 சதவிகித பொருட்களை வருடத்திற்கு 3 முறை கூட உபயோகப்படுத்த மாட்டீர்கள். இது போல் குவியும் பொருட்களால் மறுபயன்பாடே இல்லாமல் போய்விட்டது. ஒரு துண்டானாலும் புடுதுணியாக இறுதிவரை அதனை மறுபயன்பாட்டிற்கு உபயோகித்திருந்த நாம் தான், தற்பொழுது எந்த பொருளையும் மறு பயன்பாடு இல்லாமல் தூக்கி எரிய பழகிவிட்டோம் .

மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கு வருவோம். வழவழன்னு கிழவி / கிழவன் மாதிரி பேசாதே என சொல்வதற்கான காரணம் தற்பொழுது புரிந்திருக்கும் என நினைக்கிறேன். ஆம் ஏனெனில் அவர்கள் அனைவரும் பேசிக் கொண்டே இருந்தார்கள். கருவிகளுடன் வாழ்க்கை நடத்தாமல் மனிதர்களுடன் பேசி பொழுதை களித்தனர். அதன் மூலம் உறவுகளுக்கு இடையேயான நெருக்கம் அதிகமாக இருந்தது. அங்கு ஒரு மனித தன்மை இருந்தது. நல்லது கெட்டது என அனைத்தும் அவர்களுக்குள் பேசப்பட்டது. அதன் மூலம் தங்கள் வாழ்க்கையை கட்டமைத்துக் கொண்டனர்.

நம் கண்முன்னே ஒருவர் அடிபட்டு துடிக்கும் பொழுது முதலில் அலைபேசியை எடுத்து அதனை பதிவு செய்யாமல் அனைவரும் அடிபட்ட உயிருக்கு உதவி செய்தனர். தொலைக்காட்சி, இணையத்திற்கு பிறகான காலங்களில் அனைத்தையும் தொலைக்காட்சி வழியோ இணையம் வழியோ நாம் காண பழகி கொண்டோம். இங்கு மனிதர்களுக்குள் உண்டான உறவு பாலம் அறுபட்டு மனிதமற்ற மனிதர்களாகி விட்டோம்.

ஆக இந்த தொலைக்காட்சி நம்மை உடல் ரீதியாக, மன ரீதியாக, பொருளாதார ரீதியாக பாதித்து கொண்டுள்ளதே தெரியாமல் அதனுடன் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதுவும் நம் மீது தொடுக்கப்பட்ட போர் தான். தற்காத்து கொள்வது நம்மிடம் தான் இருக்கிறது. நீங்கள் நினைக்கலாம் தொலைக்காட்சியிடமிருந்து நிறைய கற்று கொள்கிறேன் என்று. அதில் தான் ஒரு திருத்தம். நீங்கள் கற்று கொள்ளவில்லை அவைகள் உங்களுக்கு கற்று கொடுக்கின்றன இல்லை தகவல்களை கொட்டுகின்றன.

உங்களுக்கு எது தேவை என்பதையும் அவைகள் தான் முடிவெடுக்கின்றன. ஒரு விவாத நிகழ்வை பார்த்தீர்களாயின் அவற்றுள் உணர்வுபூர்வமாக நீங்கள் உள்சென்று விடுவீர். ஒரு சில நாள்கள் அவ்விவாதங்களை பற்றியே சிந்தித்து கொண்டிருப்பீர்கள் பிறகு வேறு

நிகழ்ச்சிகள். இதில் நீங்கள் கவனிக்க வேண்டியது அவ்விவாத நிகழ்வினால் நீங்கள் கற்றது ஒரு புத்தகத்தில் 1 பக்கம் படித்ததற்கு கூட சமமான தகவல்களாக இருக்காது. ஆனால் அவ்விவாத நிகழ்வு உங்களை இரண்டொரு நாளாவது ஆக்கிரமித்திருக்கும்.

தொலைக்காட்சியினால் பயனே இல்லை என்று சொல்கிறீரா என ஒரு கேள்வி எழலாம். ஆம் இப்பொழுது இல்லை என்றே சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.ஒரு நிகழ்ச்சிக்காக சுமார் 300 தொலைக்காட்சி செய்தி சேகரிப்பு ஊழியர்கள் தொடர்ந்து 20 மணி நேரம் காத்திருந்து செய்தி சேகரித்தனர், உச்சமாக ஒரு தொலைக்காட்சியின் 6 நேரடி ஒளிபரப்பு  வாகனங்கள் அந்த நிகழ்வுக்காக நேரடி ஒளிபரப்பிற்கு வந்திருந்தது.

அப்படி என்ன முக்கியமான நிகழ்வு என்று நினைக்கிறீரா. ஆம், அது நடிகர்கள் சங்க தேர்தல். இந்த ஊடகங்களுக்கு இது தான் முக்கிய நிகழ்வு. இதில் 10 சதவிகித முக்கியத்துவம் கூட மக்களின் வாழ்வாதார பிரச்னைகளுக்கோ அல்லது மக்களின் சிந்தனையை தூண்டும் நிகழ்விற்கோ இங்கு கொடுக்கப்படுவதில்லை.இப்படி இருக்கையில் எப்படி ஒரு ஊடகத்தை பயனுள்ளது என நாம் குறிப்பிட இயலும்? ஐன்ஸ்டீனின் அணுகக்கருப்பிளவை ஆக்கபூர்வமாக பயன்படுத்தாமல் அழிவிற்கு பயன்படுத்திய இச்சமூகம் இந்நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு பயனுள்ளதாகவா தரும். அப்படி பயனுள்ள வகையில் அவை மாறும் பொழுது அதனை வரவேற்போம்.

அப்படி எனில் இதிலிருந்து எப்படி விடுபடுவது. இதற்கான தீர்வு தான் என்ன என நீங்கள் யோசிப்பீர்களாயின், அத்தீர்வு நம் வீட்டில் தான் உள்ளது. நம்முடைய குடும்ப வாழ்க்கை முறை தான் அதற்கான தீர்வு. நம்முடைய நேரத்தை மனிதர்களுடன் செலவிடுவது தான் அதற்கான தீர்வு. பேசுங்கள், பழகுங்கள், ரசியுங்கள், வாழ்க்கையை மனிதர்களுடன் வாழ பழகுங்கள்.

பேராசிரியர் மார்ஷல்மெக் லூகான் ஊடகங்களின் இப்படியான செயல்பாட்டை இப்படி கூறுகிறார்: முதலில் நாம் கருவியை வடிவமைக்கிறோம்; பின்னர், கருவி நம்மை வடிவமைக்கிறது. கருவிகளை விட்டொழித்து மனிதர்களுடன் வாழும் நிஜ வாழ்விற்குள் வாருங்கள்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

அடுத்த பாகம் - தடம் மாறிய தற்சார்பு

ஒற்றுமையுடன்

**- ரா.ராஜராஜன்**, மன்னார்குடி

கருத்தாழ கதைகள் பேசும்
காலத்தின் கண்ணாடிகள்
இவர்கள் தானே இந்த கால
முகநூலின் முன்னோடிகள்..

கண்ணை மூடி தூங்குனாலும்
காதுமட்டும்
திறந்துருக்கும்
ஊரு கதை அத்தனையும்
ஒண்ணா சேத்து வெச்சிருக்கும்.

கல்யாண வீடனால் என்ன?
காரிய வீடானால் என்ன?
கிசுகிசுக்களை கிளப்பிவிடும் இந்த
கிழவிகளின் நான்கே வரி
பேச்சுதான். இன்றைய
கீச்சு..

விடியலில் தொடங்கும் விவாதம். அதற்கு
விருப்பமும் பகிர்வும்
பிரமாதம்..

புள்ளியை பூதமாய்
பூதத்தை புள்ளியாக்கும்
புரளிக்கு கில்லாடிகள்
இந்த பொக்கை வாய்
தேவதைகள்



ராஜேஷ்,
மன்னை

# No Shave November



செந்தில்குமரன்
மன்னார்குடி

இந்த நவம்பர் மாதம் வந்ததும் அனைவரும் No Shave November என கூறி கொண்டு சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதை பார்த்து இருப்போம். சற்றே பொழுதுபோக்காக மாறியுள்ள இந்த பதிவிற்கு அர்த்தம் தெரியாமல் பலர் இருக்கிறார்கள்.

இது எதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்றால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சை செலவிற்கு உதவும் வகையில், ஒரு மாதம் சவரம் செய்யாமல் இருந்து அதற்கு செலவிடும் தொகையை புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக 1999ல் ஆஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்டில் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் இது குறிப்பாக ஆண்களுக்கு ஏற்படும் புற்றுநோயான புரோஸ்டேட் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது.

ஆரம்பத்தில் ஆஸ்திரேலியாவில் மட்டும் பரவி இருந்த no shave கலாச்சாரம் கொஞ்சம் கொஞ்சமாக அமெரிக்கா பக்கமும் திரும்பி பின்னர் உலகமெங்கும் பரவியது.

2003 ம் ஆண்டுக்குள் 21 நாடுகளில் No Shave November கொண்டாடப்பட்டு அதிக நிதி திரட்டப்பட்டு உலகம் முழுவதும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

80 பேர் இணைந்து இதை ஒரு லாப நோக்கு இல்லா அமைப்பாகவும், அமெரிக்க புற்றுநோய் கழகத்துடன் இணைந்தும் பல உதவிகளை செய்து வருகிறது.

ஆனாலும் 2009 ம் ஆண்டில் தான் பெரியளவில் இது பிரபலமடைந்தது. 2007 ல் இறந்த ஒருவரது குடும்பத்தைச் சார்ந்தவர்களின் முழு முயற்சியால் No Shave November இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டு புற்றுநோய் விழிப்புணர்வும், கல்வியை மேம்படுத்தவும் பல வழிகளில் ஏற்படுத்தப்பட்டது.

Moustache, November என்ற இரு வார்த்தைகளை கொண்டு Movember Foundation உருவாக்கி ஆண்கள் இளம் வயதில் புற்றுநோயால் இறப்பதை தடுக்க 30 பேர் இணைந்து உருவாக்கினர்.

ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் இந்த மாதத்தில் threading, hair cut செய்து கொள்ளாமல் அதில் செலவழிக்கும் தொகையை இந்த அமைப்புக்கு கொடுத்து வருகிறார்கள்.

https://no-shave.org

இந்த தளத்தில் பதிவு செய்தோ உங்கள் வீட்டு அருகில் உள்ள முடியாதவர்களுக்கோ இந்த ஒரு மாதம் ஏதாவது ஒரு வகையில் செலவை குறைத்து, அவர்களுக்கு கொடுங்கள்.

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.

என்ற திருக்குறளையும் மனதில் வைத்துக் கொள்வோம்.

No Shave November கொண்டாட வாழ்த்துகள்.

## - செந்தில் குமரன்
மன்னார்குடி



# இராசாதிராச சதுர்வேதி மங்கலம் என்கிற மன்னார்குடி


மன்னை ராம்

தலைப்பில் இருந்தே எதைப் பற்றி எழுதப் போகிறேன் என்பதை தாங்கள் யூகித்து இருக்க கூடும்.

இருந்தும் நானும் ஒரு முறை பெருமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், ஆம் நான் பிறந்த ஊர் மன்னார்குடியைப் பற்றித்தான் எழுத போகிறேன்.

இந்த கட்டுரையை நீங்கள் படிக்கும் நேரத்தில் மன்னார்குடியை நகராட்சியாக அறிவித்து 152 ஆண்டுகள் நிறைவடைந்து இருக்கும். தமிழகத்தில் இரண்டாவதாக நகராட்சி என அறிவித்த ஊர். பெங்களூரும் மன்னார்குடியும் ஒரே நாளில் நகராட்சியாக அறிவிக்கபட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் தவிர்க்க முடியாத இடத்தில் இருக்கும் ஒரு ஊர் மன்னார்குடி. ஓவ்வொரு ஊருக்கும் வரலாறு அடையாளங்கள் என்று இருக்கும், அந்த வகையில் மன்னார்குடியின் வரலாறு, அடையாளங்களை சேகரிக்கும் முயற்சியில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பு ஈடுபட்டு வந்தோம்.

அப்படி சேகரித்த தகவல்களை கொண்டு இக்கட்டுரையை எழுத ஆரம்பிக்கிறேன்.

மன்னார்குடி

பூமி உருண்டையின் நில நேர்க்கோட்டில் 10.663ஓமீநில குறுக்குகோட்டில் 79.445ஓஉ-யில் அமைந்து உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 15.24 மீட்டர் உயரத்தில் உள்ளது. காவிரியின் கிளை நதியான பாமணி ஆற்றங்கரையில் அமையப்பட்டு உள்ளது.

மன்னார்குடி ஊரின் எல்லைகளாக கிழக்கில் கைலாசநாதர் கோவிலும், மேற்கில் நெடுவாக்கோட்டையும், வடக்கில் பாமணியாறும், தெற்கில் அசேசமும் அமைந்து உள்ளன.

இங்கு குன்றுகளோ, மலைகளோ, பெரிய காடுகளோ இல்லை. ஆனால், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சை பசேல் என்று இரத்தினக் கம்பம் விரித்தாற் போன்ற நெற்பயிர்களைக் கொண்டுள்ளது.

மன்னார்குடியில் நூறுக்கு மேற்பட்ட குளங்களும் ஏராளமான கிணறுகளும் இருந்தன.

தற்போது 17 குளங்கள் மட்டுமே உள்ளது என்பது வருத்தத்திற்குரிய விடயம். இவ்வூருக்கு மேற்கே வடுவூரில் பெரிய ஏரி உள்ளது. மற்றபடி இங்கு ஏரி இல்லை,

மன்னார்குடியில் சீயார் தோப்பு என்ற பகுதியில் நல்ல தண்ணீர் தொட்டி என நீர் சுத்திகரிப்பு மையம், 50 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து உள்ளது, மன்னார்குடிக்கு நீர் ஆதாரமாக அப்பகுதி விளங்கி உள்ளது.

ஆழ்துளைக் கிணறுகள் வந்த பின்பு, அவை பயனற்று போய்விட்டது தற்போது அங்கு மன்னையின் மைந்தர்கள் அமைப்பினர் அப்பகுதியை தூர்வாரி அதற்கு இயற்கை வேளாண் விஞ்ஞானி ஐயா நம்மாழ்வார் பெயரில் ''நம்மாழ்வார் ஏரி'' என்று வைத்து உள்ளோம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மன்னார்குடியின் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்க நாம் ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

நான் சொல்லும் வரலாறு கிபி.985 - 1014 ஆண்டுகளில் தொடங்கப்பட்டது.

நிலவியல் துணை கொண்டு ஆராயும்போது சோழர்கள் ஆட்சியின் மத்திய காலம் வரை முல்லை நிலங்களாக இருந்து உள்ளன.

காடு நீக்கி நாடு கொள்ளும் முய்ற்சியில் சோழ மன்னர்கள் முயற்சித்த போது உருவான திருவூரே மன்னை நகரமாகும்.

இவ்வூரின் பழம் பெயர்
''இராசாதிராச சதுர்வேதி மங்கலம்''
உருவான ஊர் என்பதை விட உருவாக்கப்பட்ட ஊர் என்று சொல்வதே பொருந்தும்.

ஆம் நான்கு வீதிகளும், பிராதான சாலைகளும் அதன் அகலங்களும், கடைவீதிகளும், குளங்களும் அவ்வளவு நேர்த்தியாக உருவாக்கப்பட்டு உள்ளது. எந்த ஆண்டு சரியாக உருவாக்கப்பட்டது என்ற தரவுகள் கிடைக்கவில்லை.

கி.பி 1070 - 1125 வரை ஆட்சி செய்த முதற்குலோத்துங்கனின் மன்னார்குடி இராசகோபாலசாமி கோவில் கல்வெட்டு (கி.பி 1118) மன்னார்குடியின் பெயர் ராசாதிராச சதுர்வேதி மங்கலம் என்று நமக்கு தெரியபடுத்துகிறது.

இராசாதிராசன் என்ற சோழ மன்னன் ஒருவன் பெயரால் பிரமதேய ஊராகவும், சிறப்பு உரிமைகள் பெற்ற ஊராகவும் திகழ்ந்தது என்பதை இக்கல்வெட்டு வரிகள் எடுத்துக்காட்டுகிறது.

கி.பி 1118 இல் வெட்டப்பட்ட மன்னார்குடி கல்வெட்டின்படி இராசாதிராசன் எனும் சோழன் பெயரில் இவ்வூர் இருந்தது என்றும், கி.பி 1118 க்கு முன்பு இப்பெயரில் வாழ்ந்த சோழ மன்னன் கங்கை கொண்ட சோழன் என்ற பெயர் உடைய ராஜேந்திர சோழனின் மகனான இராசாதிராசன் சோழனால் தான் இவ்வூர் தோன்றியது என்பது தெள்ளத்தெளிவாக அறிய முடிகிறது.

இம்மன்னன் இராசகேசரி என்ற பட்டமுடையவன். மானாபரணன், வீரசேரளன்,

சுந்தரபாண்டியன் என்ற மூன்று பாண்டிய மன்னர்களை வென்றவன்.

இலங்கை அரசனாகிய விக்கிரமபாகுவையும் பிற அரசையும் வென்று ஈழ மண்டலத்தை கைப்பற்றினான். சாளுக்கிய தலைவர்களை புறமுதுகிட்டு ஓடுமாறு செய்து சாளுக்கிய தலைநகரத்தில் வெற்றி தூணொன்று நட்டான்.

சாளுக்கிய போரில் பட்டத்து யானை மீதே அம்புகள் மார்பில் பாய யானையின் மீதே இருந்து இறந்தார்.

இவர் காலத்தில் ராசாதிராச விண்ணகரம் (பெரியகோவில்) இவரது விருது பெயரான ஜெயங்கொண்டர் என்ற பெயரில் ஒரு கோவிலும், கைலாசநாதர் கோவிலும் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாறு தொடரும்...........

**- மன்னை ராம்**

அட்டைப்பட உதவி
VASA PHOTOGRAPHY
வசந்தன்
hp: 9786828973
monguski@gmail.com
vasa photography

# தந்தையைத் தேடி...

கனவில் கூட கண்டதில்லை,
என் தந்தை இப்படியொரு மாற்றத்தை
எங்கள் மீது திணிப்பார் என்று...

என் தந்தையை போல்
உலகில் வேறொருவர் இல்லை என்று
எண்ணியிருந்த காலங்கள்
கண்ணீராய் கரைகின்றன...

காரணம் ''குடி''

மாதங்கள் வாரங்களாய் மாறின,
வாரங்கள் நாட்களாய் மாறின,
இப்பொழுது நாட்கள் வேளைகளாக
மாறிவிட்டன...

எங்களின் பிறந்தநாளை மறந்ததை எண்ணி
கவலைக் கொள்ளவில்லை,
எங்கள் பெயரையும் மறந்துவிடும் காலம்
வந்துவிடுமோ
என்று தான் ஐயம் கொள்கிறோம்...

அன்று கேட்காமல்
கிடைத்த பரிசுகளை நினைக்கையில்,
இன்று கேட்டும் வசைகளை மட்டுமே
பரிசாக பெறும்போது
மீண்டும் ஒருமுறை கேட்பதற்கு
மனதில்லை...

உணவின் சுவையை உணர முடிந்த
தங்களுக்கு அதை பரிமாறும்
எங்களின் அன்பை
ஏனோ உணர முடியவில்லை...

தங்களுக்கென்ற தனி உலகத்தில்
வாழ்ந்துக்கொண்டு இருக்கிறீர்கள்.
என்ன பாவம் செய்தோமோ
அவ்வுலகில் எங்களுக்கு இடமில்லை...

கற்பனையில் மட்டுமே உங்களுடன்
சிரிக்கின்றோம்..
வலி தாங்கிக்கொள்கிறோம் வேறு
வழியின்றி...

சுருக்கமாக சொன்னால்,
முன்பு காதலிக்கிறேன் என்று
கூட சொல்ல தைரியம் இருந்த

எங்களிடத்தில்
இப்பொழுது பசிக்கிறது என்று
சொல்ல கூட பயப்படுகிறோம்...

என்றாவது ஒரு நாள்
நான் செல்லும் பாதையில்
மீண்டும் ''எங்கள் தந்தை''யை
சந்திக்க வேண்டி செல்கிறேன் ஓர்
பயணம்...

## தந்தையைத் தேடி....
## மகள்

# மாமழை போற்றுவோம்


இராசசேகரன் மன்னை

மழை, இயற்கை நமக்கு தந்த அற்புத கொடை தமிழரினத்தின் இயற்கை வழிபாட்டின் முதற்கடவுள் மாரி.

தமிழர் போற்றிப் பாதுகாத்து வணங்கி மகிழ்ந்த மழை தான் இயற்கையை பாதுகாத்து உழவை செழிப்படைய செய்தது. நாகரீகத்தை வளர்த்தது, பண்பாட்டு பாரம்பரியத்தை காத்து நின்றது. ஆனால் இதனை பாதுகாக்க தவறி, நீர்நிலைகளை இழந்து குடியிருப்பு வணிக வளாகங்கள், தொழிற்சாலைகள், சிறு மற்றும் பெருநிறுவனங்கள் என்று நீர் வழித்தடங்களை ஆக்கிரமித்ததன் விளைவு, இன்று மழைநீர் அனைத்து பகுதிகளையும் ஆக்கிரமிக்கிறது.

தவறை நாம்செய்துவிட்டு மழையை நொந்து என்ன பயன்? மழையை குறை கூறுவது உடலை வியாதியாக்கி கொண்டு உயிரை நொந்துக் கொள்வதை போன்று. வள்ளுவர் மழையின் அவசியத்தை அற்புதமாக கூறுகிறார்.

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

அதாவது வானத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லாமல், உலகத்தில் ஓரறிவுயிராகிய பசும்புல்லின் தலையையும் காண முடியாது என்று உலக இயக்கியலை தெளிவாக கூறுகிறார்.

வள்ளுவம் போற்றி வளர்ந்து வந்த தமிழரினமும் மழையின் பயனை பாதுகாக்க பல வழிகளில் நீரை பாதுகாத்து பயன்படுத்தி வந்தனர். இதன் வழியாகவே காலங்காலமாக உழவு மேற்கொண்டு தற்சார்போடு வாழ்வாங்கு வாழ்ந்து வந்துள்ளோம்.

என்றைக்கு தடியெடுத்த தண்டல்காரனை நம்பி ஊர் காத்த ஐயனார் வழிவந்த பெரியோர்களின் வழிக்காட்டுதலில் இருந்து விலகி சென்றோமோ, அன்றே அனைத்தையும் இழந்துவிட்டோம். இயற்கையும் சூழலியலையும் கெடுத்து விட்டோம்.

இதன் விளைவாக காலத்தை கணித்து பருவத்திற்கான பயிர்களை விளைவித்து உடம்பை வளர்த்து உயிரையும் வளர்த்தெடுக்க பருவத்தே பயிர் செய்த இனம் இன்று சிற்றுண்டிகளில் நாக்கால் ருசித்து உயிரை சிதைத்துக் கொண்டிருக்கிறது.

இதுமட்டுமா நம்மால் முடிந்தவரை நீர்நிலைகளை நாசமாக்கி வைத்துள்ளோம் இயற்கையாக பெய்கின்ற மழையையும் நீரூற்றுகளையும் சரியான முறையில் பயன்படுத்த ஆறு, குளம், குட்டை, வடிகால், வாய்கால், ஏரி, அகழி, அருவி, ஆழிக்கிணறு, இலஞ்சி, உறை கிணறு, ஊருணி, ஊற்று, ஓடை, கட்டிய கிணறு, கடல், கண்மாய், கலிங்கு, கால், கால்வாய், குட்டம், குட்டை, குண்டம், குண்டு, குமிழி, குமிழி ஊற்று, குளம், கூவம், கூவல், வாளி, கேணி, சிறை, சுனை, சேங்கை, தடம், தளிக்குளம், தாங்கல், திருக்குளம், தெப்பக்குளம்,

தொடு கிணறு, நடை கேணி, நீராவி, பிள்ளைக்கிணறு, பொங்கு கிணறு, பொய்கை, மடு, மடை, மதகு, மறு கால், வலயம், முள்ளம் என்றும் இன்னும் பல வழிகளை கொண்டு உழவையும் உலகத்தையும் பாதுகாத்து வந்துள்ளோம். தற்போது இவைகளின் நிலை என்னவென்று நமக்கே தெரியும்.

அருவி வழியாக நீர் சுரவமாகி ஆறுகளில் ஓடி வாய்கால்கள், வடிகால்களில் வழிந்து குளம் குட்டைகள் நிறைந்தால் மட்டுமே ஓரறிவு உயிரினம் முதல் நாம் உண்ணும் உணவு வரை சமைக்க இயலும். அதற்கான ஆற்று நீர் உரிமையைக் கேட்டால் நம்மிடம் இருக்கும் அறிவுசீவிகள் ஆற்றுநீர் வந்தால் என்ன செய்ய போகிறீர்கள்? கடலில் தானே வீணாக கலக்கிறது என்பார்கள்.

பாவம் அவர்களுக்கு தெரிவதில்லை கடலில் நன்னீர் கலக்காவிட்டால் கடல்நீரின் உப்புத்தன்மை அதிகரித்து பூமியில் உட்புகுந்து நிலத்தடி நீரில் கலக்கும் என்றும் கடலில் வாழும் பெரிய அளவிளான உயிரினங்கள் முதல் அவற்றின் உணவுச்சங்கிலியில் இறுதியாக முடிகின்ற பாசி வரை அழிந்து இயற்கை சுழற்சியே சீர்கெட்டு போகுமென்றும் மேலும் ஆற்றில் நீரோட்டம் இல்லாததால் ஆற்றுமணல் கொள்ளைப்போகிறது. இதனால் நன்னீரின் கருப்பையையே சிதைத்துவிட்டு உப்பு கலந்த நீரை குடிப்பதால் பல நோய்களுக்கும் ஆளாகின்றோம் என்பதனை அறிய மறுக்கிறார்கள்.

இதுபோக நீரோட்டத்தின் விளைவாகவே நீர் ஆவியாகி மழையாக நமக்கு கிடைக்கிறது என்ற ஆறாம் வகுப்பு பாட்டத்தையும் மறந்துவிட்டோம்.

இதோடு விட்டோமா இருக்கின்ற வாய்கால்கள் வடிகால்கள் அனைத்தையும் அடைத்து விட்டோம். ஏரிகள், ஓடைகளை ஆக்கிரமித்து கட்டிடங்கள் கட்டிவிட்டோம். குளம் குட்டைகளை விற்று தின்றுவிட்டோம். ஆக நீர் செல்லும் வழிகளையும் பருவமழைக்கான காரணிகளையும் சிதைத்துவிட்டோம்.

குளிர்சாதன பெட்டி தொடங்கி கண்ணாடி பதித்த கட்டிட முகப்பு என்று நிலத்தின் வெப்பநிலை சமச்சீரில் இல்லாமல் செய்துவிட்டோம். பொதுப்போக்குவரத்தை தவிர்த்து வண்டி வாகன அதிகரிப்பால் சுற்றுச்சூழல் சீர்கேட்டையும் அதிகரித்துவிட்டோம். இப்படி பல குற்றச்சாட்டுகள் மக்கள் மீது திணித்தாலும் ஆட்சியாளர்களின் கையாலாகாதத்தனமும் அதிகாரிகளின் கையூட்டுக்களுமே மக்களை இவ்வாறு சிதைக்கிறது.

ஒரு பைசா கடன் வாங்கக்கூட தயங்கி வாழந்த இனத்தை வீடு வாகனம் என்று கடனை கொடுத்து தவறான பொருளாதார கொள்கையில் மக்களை சிக்கவைத்து இனத்தின் மேன்மையையும் மண்ணின் வளத்தையும் சூழலின் தூய்மையையும் கெடுத்துவிட்டனர் இதுபோதாதென்று குறுகிய காலத்திலேயே நெகிழி பயன்பாடு கொடியதாக பரவி மண்ணை கெடுக்கின்ற புற்றுநோயாக வளர்ந்துள்ளது. இதனால் பருவநிலை மாற்றமடைந்து தட்பவெப்ப நிலை சீர்கெட்டு நேரக்காலமின்றி அபரிவிதமான அளவில் மழை பெய்கிறது. மழைநீர் செல்ல வழியின்றி குடியிருப்பு பகுதிகளில் புகுந்து வெள்ளக்காடாக மாறுகிறது.

ஒரு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு வரைக்கூட பருவக்காலத்தில் சரியாக மழை பெய்தது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை கிணற்றில் பத்தடி ஆழத்தில் நீரை பார்த்து தான்

வளர்த்தோம். மழைக்காலங்களில் கையால் நீரை அள்ளி பயன்படுத்துகிற அளவில் தான் வாழ்ந்தோம். அனைத்தையும் புதிய பொருளாதார கொள்கைகளும் தனியார்மையம் தாராளமையம் என்று வாரிசுருட்டி அனுப்பிவிட்டு இயற்கையை சிதைத்துவிட்டு இன்னலில் தவிக்கின்றோம்.

ஏழுபது ஆண்டுகளுக்கு முன்பு வரை ஊர்பராமரத்து என்று ஊர் மக்கள் கூடி நீர்நிலைகளை சுத்தப்படுத்தி வழித்தடங்களை பாதுகாத்து அழகாக பயன்படுத்தி வந்தோம். என்றைக்கு அதனை அரசு கையிலெடுத்ததோ அன்று தொடங்கி இன்று வரை பொருளாதார கொள்கையால் அழிந்து அவலத்தில் நிற்கின்றோம்.

திராணியற்ற அரசுகளால் உலகிற்கே நீரியல் மேலாண்மையை கற்பித்த நாம் அதிலிருந்து அன்னியப்பட்டு நிற்கின்றோம். எனது ஊர் எனது மண் எனது இனம் எனது வாழ்வியல் என்று அனைத்தையும் பாதுகாக்கும் பொறுப்புகளை அயோக்கியர்களிடம் கொடுத்துவிட்டு அவர்களை குறை கூறுவதற்கு மட்டுமே வாயை திறக்கின்றோம். இதனால் எந்த பலனும் ஏற்பட போவதில்லை அவர்களுக்கு அந்த திறமை இருந்திருந்தால் நமக்கு ஏன் இந்த நிலைமை. ஆகவே அவர்களை ஏசுவதோடு நில்லாமல் நமது நீரை நாமே பாதுகாத்து இயற்கை சூழலைக் காப்போம்.

இயற்கையை எவராலும் மாற்ற இயலாது. நாம் வளர்ச்சி என்று கூறி எவ்வளவு செயற்கையை புகுத்தி இயற்கையை சிதைத்தாலும் இயற்கை ஒரே சுழற்சியில் அனைத்து செயற்கையையும் அழித்து இயற்கையைத் தகவமைத்து கொள்ளும்.

நாம் வளர்ச்சி, வளர்ச்சி என்று அதன் எல்லையில் வந்து நிற்கின்றோம். இனிமேல் செல்வதற்கு அழிவை தவிர வேறு இடமில்லை. இன்று நம்மிடம் இருக்கும் ஒரே வாய்ப்பு, அழிவில் இருந்து தப்பி பின்னோக்கி வந்து இயற்கையை எங்கே தொலைத்தோமோ அங்கேயே மீட்டமைக்க தவறினால் இயற்கை நம்மை அழித்து அது தன்னை புதுப்பித்து கொள்ளும்.

எனவே மழையை சபிப்பதை தவிர்த்து நமது தவறை உணர்ந்து அதற்கான வழித்தடங்களை செப்பனிட்டு அனைத்து உயிர்களும் வாழும் சூழ்நிலையை உருவாக்க உறுதியேற்போம்.

ஊர் கூடுவோம்
உறவாடி இணைவோம்
உயிர் வளங்களை காப்போம்
வரமாக வந்த மாமழை போற்றுவோம்.

- இராசசேகரன் மன்னை

# கருப்பு

வெண்தோல் வேண்டி
வேண்டாத களிம்பு தடவி...!!!

வெளியில் செல்லாமல்
வெயிலில் துள்ளாமல்..!!!
வீட்டிலே கட்டுண்டவனில்லை....!!! நான்

மரந்தனில் தாவி தவறி விழுந்து
பருவத்துக்கான அத்தனையும் அனுபவித்து,
ஆண்மகனாக வளர்ந்தேன்..!!!

நிறம்
அது நிழலாகும் நற்குணம்
அது அழகாகும்..!!!

நிறம்
அது உன்னையும் என்னையும்
உடலளவில் வேறுபடுத்தும்..

என் குணம்
அது உன்னிலிருந்து
என்னை மேம்படுத்தும்...!!!

தமிழனாய்
நற்தலைவனாய் என்னை அடையாளப்படுத்தும்
என் நிறம்

கருப்பு வெறும் நிறமல்ல
அது கடவுள் எனக்கு தந்த வரம்..!!!

- கருப்பன் அமர்நாத்

# மன்னையும் மீத்தேனும்



மன்னை விக்னேஷ்

ஒரு நாள் மன்னை பெரிய கோவிலில் உள்ள பூங்காவில் அமர்ந்துக்கொண்டு மன்னையின் மதில் அழகையும், ராஜகோபுரத்தின் கம்பீரத்தையும் ரசித்துக் கொண்டிருக்கையில் எனது கைபேசி பகிரியில் ஒரு குறுச்செய்தி வந்தது.

தமிழகத்தில் மீத்தேன் எடுக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியது என்று. மனதில் ஒரு எண்ணம் தோன்றியது.

இவ்வளவு அழகான நம் ஊரில் மீத்தேன் எனும் எமன் வந்தால் நம் ஊர் என்னவாகும் என்று.

அப்படியே என் கற்பனை குதிரைக்கு றெக்கை கட்டி பறக்க விட்டுப் பார்த்தேன்.
ஊர் எங்கும் விரக்தி முகங்கள், காவிரி தாய் ஆர்ப்பரித்த தடமே தெரியவில்லை.

இயற்கை எழில் கொஞ்சிய தஞ்சை பிரதான சாலை வறண்ட பூமியாய் காட்சி அளித்தது.

நம் மண்ணின் மைந்தர்களெல்லாம் நம் மன்னையை கார்ப்பரேட்டிடம் தாரை வார்த்துவிட்டு வேறு ஊர்களுக்கு அகதிகளாய் குடி பெயர்ந்திருந்தனர். கம்பீரமாக காட்சி தரும் ராஜகோபாலசுவாமியின் ராஜகோபுரம் மீத்தேன் அதிர்வுகளால் தாங்கி பிடிக்க துணையின்றி நின்றது.

என்றைக்குமே வற்றாத தெப்பக்குளம் நீர் வற்றி மீத்தேன் கழிவுகளை சேகரிக்கும் தொட்டியாய் மாற்றி அமைக்கப்பட்டிருந்தது.

நெற்கதிர்கள் ஆடிய இடத்தில் மீத்தேன் வாயுக்கள் நாட்டை அழித்துக் கொண்டிருந்தன.

திடீரென்று என் கண்கள் பனித்தன, கவலை என் மனது சூழ்கொண்டன.
றெக்கை கட்டி பறக்க விட்டுக்கொன்டிருந்த என் மனக்குதிரையை கடிவாளத்தை போட்டு நிறுத்தினேன்.

ஆசிய கண்டத்தில் பெரும் பரப்பை ஆண்ட சோழ தேசத்தின் தலைநகரத்திற்கு அருகாமையில் மிக நேர்த்தியாக கட்டமைக்கப்பட்ட ஓர் அழகான நகரம் நம் மன்னார்குடி.

சோழ தேசமான மன்னார்குடியில் பிறந்ததை நினைத்து நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். நான் என்னுடைய தாயை எந்த அளவுக்கு நேசிக்கின்றேனோ, அதே அளவிற்கு என் மன்னை தாயையும் நேசிக்கின்றேன். நம் தாய் மன்னையை மலடாக்கும் எந்த திட்டத்தையும் நாம் அனுமதிக்கக்கூடாது.

அரசாங்கம் மீத்தேன் திட்டத்தை பல்வேறு மாற்றுப்பெயர்களில் நடைமுறைப்படுத்த முயலும், அதை நாம் விழிப்புடன் இருந்து தடுக்க வேண்டும். அது மட்டும் அல்லாமல் நம் மன்னார்குடியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துக் கொண்டே வருகிறது.

அதற்கு சிறந்த தீர்வாக நம் மன்னையின் மைந்தர்கள் அமைப்பினர் தாமாகவே முன்வந்து ஒரு ஏரியை உருவாக்கி, அதற்கு நம்மாழ்வார் ஏரி என்று பெயரும் சூட்டி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவர்களைப்போல நம் மன்னையில் உள்ள ஒவ்வாரு இளைஞர்களும் தாமாகவே முன்வந்து அவர்

அவர் பகுதிகளில் உள்ள குளங்களையும் அதற்கு நீர் வரும் வாய்கால் வழிகளையும் தூர்வாரினாலே போதும்.

வறட்சி என்ற பெயரை நம் அகராதியில் இருந்தே நீக்கி விடலாம்.

இன்று இருக்கும் சூழலில் நம் முப்பாட்டன் ராஜராஜ சோழன் மட்டும் உயிருடன் இருந்திருந்தால் நாம் வாழும் சூழலைப்பார்த்து அவமானம் தாங்கமுடியாமல் மாண்டு போயிருப்பான், அந்த மாவீரன் அரசாண்டு புலிக்கொடி நாட்டிய மண்ணில் பிறந்து வளர்ந்த நாம் அந்த பேரரசனின் உடம்பில் ஓடும் ஒரு சொட்டு குருதியின் அளவிற்காவது வீரனாக இருக்க வேண்டாமா?

கருத்தில் கொள்ளுங்கள். நம் மன்னையையும் அதன் பெருமையையும் பாதுகாப்பது மன்னையின் மைந்தர்களாகிய நமது கடமை.

வாழ்க தமிழ்

## - மன்னை விக்னேஷ்



ஓவியம்

**திவ்யா ராஜராஜன்**

# நீலப்படம்



வசந்தன்
மன்னார்குடி

இந்த தலைப்பு, பார்த்தவுடன் உங்களை அதிர்ச்சி ஆக்கியிருக்கலாம், ஆர்வமூட்டி இருக்கலாம், ஆனால் பெரும்பாலானோருக்கு இதை பற்றி ஏன் எழுதுகிறான் என்ற கேள்வி எழும்பியிருக்கும். இதை பொதுவெளியில் பேசக்கூடாத விடயமாக பார்க்கிறோம். அதனால் தான் இதை பொதுவெளியில் பேச வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன்.

ஏன் இதை பேசவேண்டும்? எந்த ஒரு தொழிலும் சரி அதன் துறையும் சரி, பேசப்படாமல் கவனிக்கப்படாமல் இருந்தால், அந்த துறையில் பலவிதமான தவறுகள் முக்கியமாக அந்த துறையின் தொழிலாளர்களுக்கு பலவிதமான சிக்கல்களும் அநீதிகளும் ஏற்படும். ஆகவே தான், கருப்பு பக்கமாக மன்னிக்கவும், நீல பக்கமாக இருக்கும் நீலப்படம் porn movie பற்றி வெளிச்சத்தில் எழுதுகிறேன்.

முதலில் நீலப்படத்தின் தோற்றத்தையும் சில புள்ளிவிவரங்களையும் பார்ப்போம். காமமும் நிர்வாணமும் அரை நிர்வாணமும் புகைப்படமாக இதழில் வந்துகொண்டு இருந்த காலத்தில் அடுத்தகட்டமாக முதல் காட்சிப்படம்.

1896 ல் ''The Kiss'' கருப்பு வெள்ளையில் வெளியானது. இதன் தயாரிப்பாளர் தாமஸ் ஆல்வா எடிசன் என்பது உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் அதுவே உண்மை. மருத்துவத்துறை, திரைப்படத்துறை, தகவல் தொழில்நுட்பத் துறைகளை தூக்கி சாப்பிடும் அளவுக்கு பாலியல் கவர்ச்சி திரைப்பட துறையில் வருமானம் கொட்டுகிறது. ஒரு வருடத்திற்கு ஹாலிவுட் ஈட்டும் மொத்த வருமானம் 8 மில்லியன் அமெரிக்கன் டாலர்.

ஆனால் பாலியல் கவர்ச்சி திரைப்பட துறை ஈட்டும் மொத்த வருமானம் 17 மில்லியன் அமெரிக்கன் டாலர். நீலப்பட தயாரிப்பில் அமெரிக்காவே முதலிடம் வகிக்கிறது. இரண்டாவது ஜெர்மனி. ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 13,000 திரைப்படங்கள் வெளியாகின்றன. 200 அமெரிக்க நிறுவனங்கள் இதன் உரிமம் பெற்று நடத்தி வருகின்றது.

39 நிமிடத்திற்கு ஒரு நீலப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது. உலக அளவில் (இந்தியா உட்பட) ஒவ்வொரு விநாடிக்கும் 53,000 நபர்கள் நீலப்படம் பார்க்கின்றார்கள். இணையத்தில் நாள் ஒன்றுக்கு மூன்று கோடி பேர் புதிதாக நீலப்படம் பார்க்க தொடங்குகிறார்கள். சராசரியாக பத்து வயதில் இருந்து நீலப்படம் பார்க்க தொடங்குகிறார்கள். மொத்த இணையதளங்களில் 40% ஆபாச இணையதளங்கள் தான்.

ஆண்களை விட பெண்கள் அதிகமாக சம்பாதிக்கும் ஒரே துறை இந்த துறை தான். ஆனால் இதில் அதிக அளவு வன் புணர்ச்சிக்கும், வன்முறைக்கும் ஆளாவது பெண்கள் தான். இவ்வகை திரைப்படங்கள் ஆணாதிக்க மனோபாவத்தை அதிகரிக்கிறது. ஒரு பெண்ணை உடலுறவின் மூலம் தான் ஆதிக்கம் செலுத்த முடியும் என்ற தவறான உணர்வை ஊட்டுகிறது. ஆபாச படங்களில் இயற்கைக்கு முரணாக, மிகைப்படுத்திய சில

செயல்பாடுகள் ஆணுக்கு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி மன அழுத்தத்தில் தள்ளுகிறது.

இதை பார்க்கும் பெண்களுக்கு, ஆண்களை தனதாக்கி கொள்வதில் அன்பை விட தன் உடல் கவர்ச்சியே பிரதானமானது என்ற எண்ணம் ஏற்படுகிறது.

பாலியல் ரீதியான தொடர் குற்றங்களுக்கும், ஆண் பெண் மனரீதியான பிரச்சனைகளுக்கும் ஆபாச படங்களே முக்கியமான காரணங்களாக உள்ளது. இளையோர் மத்தியில் பேச்சு வடிவில் இருந்த அந்தரங்கம், காட்சி வடிவில் வந்ததன் விளைவாக இதுபோன்ற பிரச்சனைகள் ஏற்பட்டிருக்கிறது.

ஆபாச படங்களில் அதிகம் கேவலப்படுத்தப்படுபவர்கள் ஆண்களை விட பெண்களே. மற்ற நாடுகளில் உள்ள ஆபாச பட நடிகைகளுக்கு pornstars இருப்பதுபோல் இந்தியா போன்ற நாடுகளில் ஆபாச பட நடிகைகளுக்கு அங்கீகாரம் என்பது இல்லை. அவர்களுக்கு நடிகைகள் என்ற அங்கீகாரம் கிடையாது. ஆகையால் அவர்களுக்கு வாழ்வாதார பிரச்சனையும், பாதுகாப்பின்மையும் இருக்கிறது. சாமானிய பெண்களுக்கே பாதுகாப்பற்ற நாட்டில் ஆபாச படங்களில் நடிக்கும் பெண்களுக்கான பாதுகாப்பு பற்றி யோசித்துக்கொள்ளுங்கள்.

இதில் நடிக்க கூடிய பெண்களுக்கு சராசரி வயது சாமானிய பெண்களை விட குறைவு. ஏனெனில் இவர்கள் பல பாலியல் ரீதியான நோய்களுக்கு ஆளாகி சீக்கிரமாக மரணம் அடைகிறார்கள். இவர்களில் தற்கொலை செய்து கொள்பவர்கள் அதிகம்.

காமம் என்பது கண்களால் பார்க்கக் கூடிய விடயமல்ல, இணைந்து அனுபவிக்க வேண்டிய அற்புதம். அதை காட்சியாக பார்க்கும்போது ஆண் பெண் இருபாலருக்கும் நுண்ணுறுப்புகள் பாதிப்படைகின்றன. பூவின் வாசத்தை பார்க்க முடியாது முகரவே முடியும். அத்தகையது காமம்.

ஒரு பெண் பிரசவிப்பது போல் நடித்து விடலாம், ஆனால் உடலுறவு கொள்வது போல் நடிப்பது என்பது மிக கொடுமையானது. ஆபாச பட காட்சிகளில் பெண்கள் இயற்கைக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள், விருப்பத்துக்கு மாறான நடவடிக்கைகளிலும், தவறான உறவுநிலைகளில் புணரப்படுகிறார்கள். மேலும் அருவருப்பான செயல்களிலும் வற்புறுத்தப்படுகிறார்கள். பார்வையாளர்களின் வித விதமான எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக சிறு சிறு குழந்தைகளும் பயன்படுத்த தொடங்கி இருப்பது பெரும் வேதனை.

இதனை இச்சையுடன் பார்த்திருப்பீர்கள். இனி அந்த நாயகியின் மன நிலையில் இருந்து பாருங்கள். அவள் வேதனை உங்களை தாக்கும். நாம் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பவர்கள் நம் எதிரிகள் தான் என்று மாவோ கூறுகிறார். அது போல் ஆபாச பட வளர்ச்சியை தீர்மானிப்பது தயாரிப்பாளர்கள் இல்லை பார்வையாளர்களாகிய நாம் தான்.

நீலப்படம் பார்ப்பதை நிறுத்தினால் சுயநலமும் உண்டு பொதுநலமும் உண்டு.

சிந்தியுங்கள். பார்ப்பதை நிறுத்துங்கள்.

நிலத்தை பிடுங்கிய இந்தியமே
வளத்தை எமக்கு திருப்பிக் கொடு

கழுத்தை அறுக்க துணிந்தாயே
செருக்களத்தை நீயும் அறியாயோ
எடுத்ததை நீயும் தர மறுத்தால்

ஒடுக்கும் போக்கை விட மறுத்தால்
அடக்கும் கரங்களை உடைத்தெறிவோம்
தடுக்கும் தடைகளை தகர்த்தெறிவோம்

செங்குருதியில் விதைத்த எண்ணமடா
தாயகம் மீட்பது திண்ணமடா
ஆள நினைக்கும் அயலானே

உன் கழுத்தில் எந்தன் கைகளடா
நீங்கள் எழுதிய வரலாற்றில்
ஐயோ எல்லாம் பொய்களடா
ஆடு மேய்க்க வந்தவனே

மாடு பிடிக்க தடை போட்டான்
காடு கழனி அழித்திடவே
எங்கும் எரிவளி கடை போட்டான்

சோறு போட்ட சோழத்தில்
ஆறு வறண்டு கிடக்குதடா
ஏறு பூட்டி ஏருழுத
மண்ணும் சினத்தில் சிவக்குதடா

புலிகள் திரிந்த தாயகத்தில்
நரிகள் பலரின் நடமாட்டம்

- ஆரல்கதிர் மருகன்
லெட்சுமாங்குடி

# இன்றைய பாலியல் குற்றங்களை தடுப்பதற்கு என்னென்ன தேவை...?



ம. மணிவர்மன்

தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வதே பெண்களுக்கு அழகு
- ஔவையார்

எது பாலியல் வன்முறை?

பாலியல் துன்புறுத்தல் என்பதில் தொடுதல் அல்லது தொட முயற்சித்தல், பாலியல் ரீதியான விஷயங்களைக் கோருதல் அல்லது வலியுறுத்தல், பாலியல் தொனியில் பேசுதல், ஆபாச படங்களைக் காட்டுதல், இதர விரும்பத்தகாத பாலியல் தன்மையுடன் கூடிய உடல் ரீதியான அல்லது வார்த்தைகள், சைகைகள் கொண்ட நடத்தை போன்றவை அடங்கும்.

இந்தியாவில் ஒவ்வொரு 30 நிமிடத்திற்கு ஒரு பாலியல் பலாத்கார சம்பவம் நடப்பதாக ஆய்வு அதிர்ச்சியளிக்கிறது. பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை தடுக்க எத்தனையோ கடுமையான சட்டங்கள் போடப்பட்டாலும் நாளுக்கு நாள் பாலியல் பலாத்கார சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. இந்தியாவில் கடந்த 13 ஆண்டுகளில் நடைபெற்ற பாலியல் பலாத்காரங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, நாள் ஒன்றுக்கு 57-க்கும் அதிகமான பெண்கள் நாட்டில் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாவதாக தெரியவந்துள்ளது.

நாட்டில் நிலவக்கூடிய சமுதாய சீர்கேடுகள் அனைத்திலும் முந்தி நிற்பது பாலியல் வன்கொடுமை என்று சொன்னால் அது மிகையாகாது... சரி வாங்க விடயத்துக்குள் போவோம்.

கலாச்சாரம் என்கிற பெயரில் இதுவரை பாலியல் பற்றிய பேச்சை பொதுவெளியில் விவாதிக்க தயங்கும் பிற்போக்கான சமூக அமைப்பில்தான் இருக்கிறோம் நாம். அதைப் பற்றிய சரியான புரிதல் பெரியவர்களுக்கிடையே இல்லாத பொழுது இளம் பிஞ்சுகள் என்ன செய்ய முடியும்?

வளர்ந்துவிட்ட பெண் சமுதாயத்தை சரியான கோணத்தில் பார்க்க நாம் சொல்லித் தரவில்லை என்பதுதான் உண்மை.

வீட்டிலும் பள்ளியிலும் சொல்லித் தரவேண்டிய தனி மனித ஒழுக்கங்கள்:-

நம் வீட்டில் அப்படி யாராவது அதீத மன வக்கிரத்தில் இருப்பவர்களாகத் தெரிந்தால் உடனடியாக கவனித்து அவர்களுக்கு வேண்டிய மருத்துவ, மற்றும் மன நல அறிவுரைகள் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும். ஏனென்றால் இன்று நடக்கும் பல பாலியல்

கொடுமைகள் வீட்டில் உள்ளவர்களால் தான் நடத்தப்படுகின்றது. அதுவும் நெருங்கிய உறவுகளால் என்கிறது பல ஆய்வுகள்.

வீட்டில் இருக்கும் உறவுகளின் மன நிலையைக் கவனியுங்கள். அவர்களின் பிரச்சனைகளைக் கண்டறிந்து தீர்வு காண்பதற்கு முயலுங்கள்.

உங்களால் அவர்கள் சமுதாயப் பிரச்சனையாக மாறுவதைத் தடுக்க முடியும். குட் டச்! பேட் டச் பற்றிப் பேசவிருக்கும் நாம் நமது தார்மீகக் கடமையிலிருந்து தவறுவது குழந்தைகளுக்கு நாம் இழைக்கும் அநீதியாகும்.

உலக சுகாதார நிறுவனம் நாம் கடைப்பிடிக்க வேண்டிய சில வழிமுறைகளைக் குறிப்பிட்டுள்ளது. அவை:

எந்த உறுப்பும் மர்மமானதோ, ரகசியமானதோ இல்லை. ஆனால், அந்தந்த கால கட்டத்துக்கு சொல்லி உஷார் படுத்துவது நல்லது.

யாராவது, குழந்தைக்கு முத்தம் கொடுத்தால் கூட குழந்தையை விட்டே தடுப்பது நல்லது.

தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகளின் மார்பகம் உட்பட மறைக்கப்பட வேண்டிய உறுப்புகளை, யாரும் தொடவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

குழந்தை வீட்டை விட்டு அடிக்கடி வெளியில் போகிறாள் என்றால் அதனைக் கண்காணிக்க வேண்டும்.

நம் தொலைக் காட்சியில் திரையிடப்படும் சில நிகழ்ச்சிகளைப் பார்த்தும் கூட பிள்ளைகள் தவறான நடத்தைக்கு உட்படலாம். அதனால், அது சரி, இது தவறு என்று ஆரம்பத்தில் இருந்தே எச்சரிப்பதுடன், கண்காணிப்பது முக்கியம்.

வெளியாட்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி அவசியம் எச்சரிக்க வேண்டும்.

குழந்தைகளிடம் எந்த கட்டத்திலும், தவறு என்று தெரிந்தால், உடனே போன் செய்யவோ, வெளியேறவோ அட்வைஸ் செய்து வைக்க வேண்டும்.

நம் நாட்டிலா இப்படி? நம் ஊரில் இப்படியெல்லாம் நடக்காது என்று இந்த விசயத்தை ஒதுக்கிவிடாமல் நம் குழந்தைகளைக் காத்து வளமான எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவோம்.

ஆரம்ப கட்டத்தில் குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே இந்த வகுப்புகள் நடத்தப்பட்டன என்றாலும் தற்போது உள்ள சூழ்நிலையில் பள்ளி நிர்வாகங்கள் மழலையர் பள்ளியிலேயே இத்தகைய வகுப்புகளை நடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

அந்த வகையில், பஞ்சாப் மாநிலம் லூதியானா நகரில் இயங்கிவரும் பிசிஎம் பள்ளி,

கேவிளம், குருநானக் பப்ளிக் ஸ்கூல், கிரீன்லாண்ட் பப்ளிக் ஸ்கூல் போன்றவற்றில் சிறுவர் சிறுமியருக்கு பாலியல் விழிப்புணர்வு பாடம் நடத்தப்பட்டு வருகிறது.

இதுகுறித்து, பிசிஎம் பள்ளியின் தலைவர் பரம்ஜித் கவுர் கூறுகையில், மத்திய அரசின் பாட திட்டத்தின் கீழ் எங்கள் பள்ளியில் இளம் பருவத்தினருக்கான பாலியல் விழிப்புணர்வு கல்வி கற்பிக்கப்படுகிறது.

ஆறாம் வகுப்பில் இருந்து பத்தாம் வகுப்பு வரையிலான மாணவ- மாணவர்களுக்கு இந்த பாடம் நடத்தப்படுகிறது.

ஆயினும், வயது பாராமல் பெருகி வரும் பாலியல் வன்முறைகளில் இருந்து சிறுமிகளையும் காப்பாற்றும் நோக்கில், தற்போது மூன்றாம் வகுப்பு முதல் இந்தப் பாடம் நடத்தப்படுகிறது.

குழந்தையிடம் குழந்தை பாலியல் கொடுமை பற்றி உண்மையில் பேசுவது கடினம். எனவே அதைப் பற்றி உங்கள் குழந்தையிடம் எப்படிப் பேச ஆரம்பிப்பது என்பது ஒரு சிக்கலான செயலாக இருக்கலாம்.

அதற்கு இதோ, சில ஆலோசனைகள்:

ஆண்-பெண் பாலியல் உறவு என்பது ஒரு இயல்பான விஷயம் என்பதை முதலில் நீங்கள் உணர்ந்து கொண்டு, உங்களிடம் உள்ள இறுக்கத்தைத் தளர்த்துங்கள். குழந்தையிடம் பேச ஆரம்பிக்கும் முன்னர் தகவல்களை நீங்கள் முழுமையாகத் தெரிந்து கொள்வது அவசியம்.

பொதுவான, மற்றும் சுய பாதுகாப்பு விதிமுறைகளை குழந்தைக்கு உருவாக்கிக் கொடுங்கள் எடுத்துக்காட்டாக, சாலையைக் கடக்கும்போது இரண்டு புறமும் பார்க்க வேண்டும் அல்லது தீக்குச்சியை வைத்து விளையாடக்கூடாது என்பது போன்ற பாதுகாப்பு விதிகளைக் கற்றுக் கொடுங்கள். இவற்றோடு கூடவே சுய பாதுகாப்பு விதிமுறைகளையும் கற்று கொடுங்கள்.

இயல்பாகவே குழந்தை ஆவலுடன் கேள்விகள் கேட்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். குழந்தைகள் எங்கிருந்து வருகின்றன? அல்லது பாலியல் உறவு என்றால் என்ன?- போன்ற கேள்விகளைத் தவிர்க்காதீர்கள். கேள்விகளுக்கு விடைகூறி குழந்தையின் இயல்பான ஆவலுக்கு மதிப்பளியுங்கள். இல்லையெனில், ஆவலைத் தீர்த்துக்கொள்ள, முறையற்ற வேறு வழிகளை அவள்(ன்) நாடக்கூடும்.

ஒரு வேளை அப்படி நடந்தால்... விளையாட்டைக் குழந்தையுடன் விளையாடவும். எடுத்துக்காட்டாக, ஒரு வேளை கடைத்தெருவில், நாம் பிரிந்துபோய் உன்னால் என்னைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் நீ என்ன செய்வாய்?

ஒரு வேளை உன் தனிப்பட்ட உடல் உறுப்புகளை எவரேனும் தொட முயன்றால், நீ என்ன செய்வாய்? என்றெல்லாம் குழந்தையைக் கேளுங்கள்.

குழந்தைக்குத் தொடர்புடைய, பழக்கமான சூழலைப் பயன்படுத்துங்கள். சரியான விடை சொல்ல குழந்தையை ஊக்கப்படுத்துங்கள்.

கடினமான சூழ்நிலைகளைச் சந்தித்த குழந்தைகள் பற்றியும் அவர்கள் எப்படி அந்தக் கடினமான சூழல்நிலைகளை சமாளித்தார்கள் என்பது பற்றியும் உள்ள கதைகளைக் குழந்தைகளுக்குப் படித்துக் காண்பியுங்கள்.

இந்தக் கதைகளைப் படிப்பது மூலம் பாதுகாப்பு விவகாரங்கள் பற்றி நம்பிக்கையூட்டும் எண்ணத்தைக் குழந்தையிடம் ஏற்படுத்த முடியும். குழந்தை சந்திக்கும் பிரச்சினைகள், அதற்குத் தேவையான உதவி போன்றவற்றை பற்றி உங்களிடம் குழந்தை பேச இது ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஊடகங்களின் பங்கு:

பாலியல் குற்றம் தொடர்பான தொடர் விழிப்புணர்வு முகாம் எங்கும் நடைப்பெறுவதாகத் தெரியவில்லை.

தொலைக்காட்சியில் நடனம், சமையல், வாக்குவாதம் முதலியவற்றை அலசி ஆராய்ந்து பரிசு கொடுக்கப்படுகிறது.

என்றாவது இதுபோன்ற குற்றங்களுக்கு ஒரு விழ்ப்புணர்வு நிகழ்ச்சியை தொடர்ந்து வழங்கி இருக்கிறதா இல்லையே. ஏன்? பாலியல் குற்றங்கள் எல்லாம் தொலைக்காட்சிக்கும், செய்தித்தாளுக்கும் வெறும் சம்பவங்களே. அன்றைய நாளுக்கான ஒரு தலைப்புச்செய்தி, அவ்வளவே!

அரசாங்கத்தின் செயல்பாடுகள்:

கடும் தண்டனைகள் அப்பொழுது மட்டும் பயன் தரும் என்றாலும், காலத்திற்கும் பயன் தராது, உச்ச பட்ச தண்டனையை உடனே தரும் அளவிற்கு நம் அரசியல் அமைப்பில் சட்டங்கள் இல்லை.

அவர்களால் உடனே செய்யப்படக் கூடியது, முடிந்தவரை ஆபாசப் படங்களை அனைவரும் பார்க்க உதவும் இணைய தளங்களை மூடுவது, முடிந்தவரையில் தொலைபேசிகளிலாவது தடுக்கப்படவேண்டும்.

சமுதாயத்தின் பங்கு:

முன் சொன்ன அனைத்திலும் சமுதாயத்தின் பங்கு இருக்கிறது. மற்ற குற்றங்களைப் போல் அல்லாமல், பாலியல் வன்முறையில் மட்டும், பாதிக்கப்பட்டவர்களே, தொடர்ந்து தண்டனை அனுபவிக்கிறார்கள் சமுதாயத்தின் கைகளில். பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டவர் மற்றும் அவர் குடும்பத்துக்கு தோள் கொடுத்து ஆதரவு அளிக்காவிட்டாலும் பரவாயில்லை. ஆனால அவர்களை குற்றவாளிகளாகவும் பரிதாபமாகவும் பார்ப்பதை நிறுத்த வேண்டும்.

ஒரு பெண்ணிற்கு அநீதி நேர்ந்தால், குற்றவாளி தண்டிக்கப்படும் வரை போராட வேண்டும்.

நியாயம் கிடைக்கவில்லையெனில், தர்மத்தை நம் கையில் எடுப்பதால் தவறில்லை. குற்றங்களுக்கு வெறும் பார்வையாளனாக மட்டும் இருப்பதை விட்டு விட்டு அதைத் தடுக்க வேண்டியது இச்சமுதாயத்தின் கடமை. இக்கடமை வீட்டிலும் பள்ளியிலும் சிறு வயதிலிருந்தே போதிக்கப்பட வேண்டும். தட்டிக்கேட்கும் வரை குற்றங்கள் நிற்கப் போவதில்லை, தட்டி வைக்கும் வரை குற்றவாளிகள் நிறுத்தபோவதில்லை.

வக்கிரம் பிடித்த நபர்களுக்கு...

திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. அது போல குற்றம் புரிந்தவன், குற்றம் செய்ய இருப்பவன் தன் தாய்க்கோ, மனைவிக்கோ, அக்கா, தங்கைக்கோ, மகளுக்கோ இப்படி பாலியல் குற்றம் நடந்தால் என்னவாகும் என்று ஒரு நொடி நினைத்துப் பார்த்தால் மட்டுமே அவனால் அந்தக் குற்றத்தை செய்யாமல் இருக்க முடியும்.

சட்ட திட்டங்கள் / அரசு பாதுகாப்பு நடவடிக்கைகள்:
கண்டிப்பாக இது தண்டனைகளை விட அதிக அளவு உதவும். ஒவ்வொரு புகாரும், நாட்டின் தீவிரவாத தடுப்பு நடவடிக்கை போல் விரைவாக கையாளப்பட வேண்டும். இதில் பாதிக்கப்பட்டவர்கள், கலங்கப்படாமல் நடத்தப்பட வேண்டும். இது காவல் நிலையம் மூலமாக மட்டுமே கையாளப்பட வேண்டிய நிலை மாறி,

சில சமூக ஆர்வலர்கள், மனோதத்துவ நிபுணர்கள், Professional family counsellors அடங்கிய குழு/சங்கம் மூலமாகவும் நடத்தலாம். அப்பொழுது தான் மக்கள் தைரியமாக புகார் தர முன்வருவார்கள். இதன் மூலம் பாதிக்கப்பட்டவருக்கும் மறுவாழ்விற்குரிய நடவடிக்கைகள் தொடங்குகின்றன.

பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்குக் காரணமாக இருப்பதில் முக்கியமானவை வலைத்தளங்கள்.

இன்றைய மாணவர்கள் கையில் பேனா இருக்கிறதோ இல்லையோ அனைவரிடத்திலும் கைபேசி உள்ளது. வலைத்தளங்களில் உலாவும் தவறான காட்சிகளையும் செய்திகளையும் முறைப்படுத்துவது காலத்தின் கட்டாயம். அரசு இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

பொதுவான கருத்து...
இப்போதுதான் இதுபோன்ற கொடுமைகள் பரவலாக நிகழ்கிறது போன்ற ஒரு தோற்றத்தை ஊடகங்கள் ஏற்படுத்துகின்றன. இது உண்மையல்ல.

பெண்களுக்கு எதிரான கொடிய அடக்குமுறைகள் காலங்காலமாக இந்தியாவில் நடந்து வருகின்றன. இதற்கான காரணங்களை நாம் வகைப்படுத்தும்போது அரசை மட்டும் குற்றம் சொல்வதில் பயனில்லை.

பெண்கள் மட்டுமல்லாது, இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் பாதுகாப்பு தருவது அரசின் பொறுப்புதான், கடமைதான் என்ற போதும், நமது இந்திய மனங்களில் பெண்கள் குறித்து காலகாலமாக உருவாக்கி வந்திருக்கும் பதிவான சில பிம்பங்களும் இதற்கு ஒரு

முக்கிய காரணம்.

இந்திய பழமைவாத சமூகம் பெண்கள் குறித்து இயல்பிலேயே அவளை ஒரு மனித உயிரியாகக் கூட எண்ணுவதில்லை.

சமையல் கட்டிலும், கட்டிலுக்கும் மட்டுமே உபயோகமானவள் பெண் என்பதே நமது சமூகத்தில் நிலவி வந்திருக்கும் பண்பாடு.

இதைக் கருத்தில் கொண்டே இன்று பெண்கள் மீது ஏவப்படும் பலாத்காரம் குறித்து சிந்திக்க வேண்டும். இதில் சம்பந்தப்பட்ட ஆண்கள் பெண்கள் தவிர, சமூக பாதுகாப்பின்மை, ஊடகங்களின் ஆபாசம் ஆகிய அனைவருமே காரண கர்த்தாவாக ஆகிறார்களா?

தற்போது இவ்வாறான பெண்மைக்கு எதிரான குற்றங்களுக்கு கடுமையான தண்டனை தேவை என்ற நிலைப்பாடு அனைவரிடமும் ஏற்பட்டிருக்கிறது.'நள்ளிரவில் ஒரு பெண் தன்னந்தனியாக எவ்வித அச்சமுமின்றி உலாவரும் நாளே இந்தியா உண்மையில் சுதந்திரம் அடைந்தது என்பதைக் குறிக்கும் நாளாகும்' என்றார் காந்தி.

அறுபது வருடங்களுக்கு மேல் ஆகியும் அப்படி ஒரு நாள் இன்றும் வரவே இல்லை என்பது தான் வரலாற்றில் பெரும் சோகம்!

கருத்து - ஒவ்வொரு மனிதனுக்கும் சுய ஒழுக்கமும்,கட்டுப்பாடும் அவசியம். ஆணும் பெண்ணும் சமமாக மதிக்கப்படவும், காக்கப்படவும் வேண்டும். இதை குழந்தை பருவத்தில் இருந்து கற்று கொடுக்கவும் வேண்டும்

- திருக்குறள் -
ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

- விளக்கம் -
ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது

- பழமொழி -
அறிந்துகொள்ளவும்
பெண் பாவம் பொல்லாதது
புரிந்துகொள்ளவும்
பெண் இன்றிப் பெருமையும் இல்லை
கண் இன்றிக் காட்சியும் இல்லை.
தெரிந்து கொள்ளவும்
ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று

**- ம. மணிவர்மன்**
திருராமேஸ்வரம்

# இறைவி

நீ என் உயிரானவள்!
நீ என் உணர்வானவள்!
நீ என் எண்ணங்களின் பிறப்பிடம்!

என் உயிர் உறைந்துப் போகாமல் இருக்க
இறைவன் அனுப்பிய இதமான இதயம் நீ!

தாயுமானவளே!
என் தந்தையுமானவனே!

மறுபிறவி ஒன்று வேண்டும்
நீ என் மகளாகவும்
நான் உன் தாயாகவும் வேண்டும்!

உன்னை உயிராக நேசிக்க மட்டுமல்ல
உயிராக சுவாசிக்க!!!

- க. உதயநிதி
மன்னை இராசகோபால சுவாமி அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி



கைபேசி வடிவமைப்பு:
செ.மிதுன்பாலா,
மழையர் வகுப்பு,
தரணி பள்ளி,
மன்னார்குடி.

# விவசாயம்



ப. ஆனந்த்

மனித உயிர்களின் அடிப்படை தேவை உணவு, உடை, இருப்பிடமாகும். உயிர்கள் வாழ அடிப்படையான உணவை மக்கள் உற்பத்தி செய்யும் உன்னதமான சேவை விவசாயம்.

விவசாயம் என்ற ஒன்று இல்லை என்றால் உலகமே இயங்காது. விவசாயம் நாட்டின் முதுகெலும்பு என்று காந்தியடிகள் சொல்லியிருக்கிறார். விவசாயம் முதுகெலும்பு அல்ல அது ஒரு நாட்டின் உயிர். இத்தகைய விவசாயத்தில், உலக நாடுகளில் முக்கிய நாடாக இந்தியா உள்ளது.

தமிழ்நாட்டை ஆண்ட பல மன்னர்கள், நம் முன்னோர்கள் விவசாயத்தை சிறப்பாக செய்து இயற்கையாகவே நல்ல வாழ்வை வாழ்ந்து வந்தனர்.

நம் முன்னோர்கள் காணி நிலமும், காளை மாடும் இருந்தால் போதும் வாழ்க்கையில் முன்னேறிவிடலாம் என்று எண்ணினர். அதனால் விவசாயத்தை போற்றி வளர்த்தனர். பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று கல்வி அறிவு அதிகம் பெறவில்லை என்றாலும், அவர்கள் வாழ்ந்த சூழலில் இருந்து விவசாயம் பற்றி நன்கு அறிந்து இருந்தனர். அதனால் தலை நிமிர்ந்தும் வாழ்ந்தனர்.

இந்த புதிய சமூகத்தில் படிப்பை முடித்தோம், நல்ல வேலைக்கு சென்றோம். பணம் சம்பாதிக்க வெளிநாடு பறந்தோம் என விவசாயத்தை மறந்து விட்டோமா என்ற ஐயம் தோன்றுகிறது.

விவசாய நிலங்களும் காலப்போக்கில் வியாபார நிலங்களாக மாறி விவசாயத்தை மேலும் நிலைகுலைய வைக்கிறது.

படிப்புக்காகவோ வாழ்க்கை தேவைக்காகவோ பல விவசாய குடும்பங்கள் நிலத்தை விற்கவும், இளைய தலைமுறையும் நவீன உலகத்தை நோக்கி செல்வதால் விவசாயத்தை மறக்கத் தொடங்கிவிட்டன.

படித்தால் வேலை என்று சொல்லிய சமூகம் விவசாயம் இருந்தால் தான் உணவு என்று சொல்ல மறந்துவிட்டதால் பெரும் அழிவை உலகம் சந்திக்க போகிறது. முன்னோர்களும் பெற்றோர்களும் இந்த உலகத்தை விட்டு போன பின் தற்போதைய புதிய தலைமுறை விவசாயத்தை மறந்துதான் போகப் போகிறது.

கொள்ளை கும்பல்களின் சூழ்ச்சியால் விவசாய நிலங்கள் அழியத் தொடங்கிய தருணத்தில் விவசாயத்தை அறியாமல் வாழப்போகும் இளம் தலைமுறையால் விவசாயத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாய் நிற்கிறது.

மருத்துவம், பொறியியல் என பணம் சம்பாதிக்கும் படிப்பை நோக்கி நகரும் சமூகத்தால் நம்

முன்னோர்கள் உன்னதமாய் காத்த விவசாயம் அழிவை நோக்கியே நகர்கிறது.

உணவு இல்லாமல் எப்படி மனிதன் வாழப்போகிறான்?

பல கனவுகளோடு வாழ நினைக்கும் இளைய சமுதாயமே வருங்கால வாழ்வுக்கு தேவையான விவசாயத்தை என்ன செய்ய போகிறாய்?

- ப. ஆனந்த் (BCA)

---

# அன்னை தெரசா

- ஜீ. சரளா
மன்னை இராசகோபால
அறிவியல் மற்றும்
கலைக் கல்லூரி

கருவறையில் சிசுவை சுமக்கவில்லை - என்றாலும்
கருணையரையில் சுமந்த சிசுக்களுக்குக் கணக்கில்லை...

பிள்ளை ஈன்றவளோ குப்பையில் போட்டாள்
அன்னை இல்லை என்றவனின் எச்சிலையும் ஏற்றாள்

யாசித்து உணவளித்தாள் பிள்ளையின் பசியார
அன்னை யோசிக்காமல் அரவணைத்தாள் அனாதைகளின் ஏக்கம் தீர...

கருணையே வடிவமாய் உருவெடுத்த அன்னை
கருணையே இல்லாமல் விட்டுப் பிரிந்தால் மண்ணை...

தாரம் ஆகாமலே தாயான அன்னை
தூரம் தொலைந்தாலும் திறந்து விட்டுத்தான் சென்றாள்
அனாதைகளின் கனவுக் கண்ணை.. !

போஸ்
10ஆம் வகுப்பு
தேசிய மேல்நிலைப் பள்ளி,
மன்னார்குடி



# அது ஒரு வசந்த காலம்


செந்தில் பக்கிரிசாமி
மன்னை

பேரைக் கேட்கும் போதே இந்நேரம் உங்கள் மனதை 20, 30 வருடம் பின்னோக்கி சென்றுச் கொண்டு இருப்பீர்கள். உங்களுக்கே தெரிகிறது இன்றைய சூழ்நிலை நிச்சயம் நமக்கு வசந்த காலமாக இருக்க போவதில்லை.

1980 குழந்தையான நான், என்னுடைய சிறு வயது வசந்த காலத்தை உங்கள் முன் பகிர்ந்துக் கொள்ளப் போகிறேன்.

வசந்தம் - 1 (தொலைக்காட்சி)

80களின் இறுதி அது. எங்கள் பகுதிகளில் தொலைக்காட்சிப் பற்றிய அறிமுகம் நன்கு ஏற்பட்ட காலம். ஆனால் இப்போது போல் அனைவரின் வீடுகளிலும் தொலைக்காட்சிப் பெட்டி இருந்ததில்லை. அதே போல் ‘மனம் ஒரு குரங்கு’ என்பதை நிரூபிக்கும் வகையில் நிமிடத்திற்கு ஒருமுறை வேறு வேறு அலைவரிசையை மாற்றி மாற்றி பார்க்கும் அளவிற்கு பல சேனல்கள் இல்லை. ஒரே ஒரு அலைவரிசை ஒரே ஒரு வாய்ப்பு தூர்தர்சன்.

தெருவில் ஏதேனும் ஒரு வீட்டில் மட்டுமே தொலைகாட்சி பெட்டி வைத்து இருப்பார்கள். அங்கு போய் தான் நாங்கள் பார்க்க முடியும். அதுவும் 24X7 போல் எந்நேரமும் நிகழ்ச்சி நிரல்கள் இருக்காது. குறிப்பாக வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு ஒளிபரப்பாகும் ’ஒளியும் ஒலியும்’ என்ற நிகழ்ச்சி.

புதிய பாடல்கள் ஒரு 5 அல்லது 6 முறை ஒளிபரப்புவார்கள். அந்தத் தருணத்திற்காக அனைவரும் தொலைக்காட்சி பெட்டி உள்ள அந்த வீட்டில் ஒன்றுக் கூடி புதிய திரைப்படப் பாடல்களைக் கண்டு ரசிப்போம். ஆனால் சில சமயம் பழையப் பாடல்களை ஒளிபரப்பி எங்களை பெருத்த ஏமாற்றத்திற்கு உட்படுத்துவார்கள்.

அதே போல ஞாயிறு மாலை 5.30 மணிக்கு திரைப்படம் ஒளிப்பரப்புவார்கள். அது எந்தப் படமாக இருந்தாலும் அதை பார்த்தே தீருவோம். பார்வையாளர்கள் கூட்டம் அதிகம் என்பதால் முன் கூட்டியே 5 மணி அளவில் நண்பர்கள் இடம் பிடித்து வைப்பார்கள் நாங்கள் அமர. இதில் சில குறும்பு கார பசங்க, சூடு காய் என அழைக்கப்படும் ஒரு வித காயை தரையில் வேகமாக உராய்ந்து (அவ்வாறு செய்யும் போது அதிக சூடு அடையும்) ஆர்வமாக தனக்கு முன்னால் படம் பார்த்து கொண்டு இருக்கும் பையனின் தொடையில் வைத்து விடுவார்கள். பழுத்துவிடும். இவனுங்க தான் பிஞ்சிலே பழுத்தவனுங்க.

ரமணா படத்துல விஜய்காந்த் அடிக்கடி சொல்வார்,தமிழில் எனக்கு பிடிக்காத ஒரே வார்த்தை ’மன்னிப்பு’ என்று. ஆனால் அப்போது எங்களுக்கு தமிழில் பிடிக்காத வார்த்தை ’தடங்கலுக்கு வருந்துகிறோம்’’

பின்ன என்ன! ஆசை ஆசையா படம் பார்க்கும் போது அடிக்கடி அந்த வார்த்தையை

போட்டுக்கிட்டே இருந்தா எங்களுக்கு கடுப்பா வராதா? தொலைக்காட்சியை சுருக்கி டிவி (tv) என்று அழைப்பார்கள். அதன் விரிவாக்கம் television என்று எங்களுக்கு அப்போது தெரியாது. ஒரு அறிவாய்ந்த நண்பன் சிறப்பாக அதன் விரிவாக்கம் கண்டுப்பிடித்தான். இவனுங்க எப்ப பார்த்தாலும் தடங்கலுக்கு வருந்திக்கிட்டே இருக்கானுங்க. அதான் இது பேர் tvன்னு. (தடங்கலுக்கு வருந்துகிறோம்) பல சமயம் அலைவரிசை சரியாய் இல்லாத காரணத்தால் டிவி தெளிவாகத் தெரியாது.

அப்போது எல்லாம் ஆண்டெனாவை அங்கும் இங்கும் திருப்பி ஒரு வழியாக ஏதாவது ஒரு திசையில் படம் தெரிய ஆரம்பிக்கும். அவ்வாறு வெற்றிகரமாக செய்பவனே எங்களுக்கு அன்றைய தொலைதொடர்பு பொறியாளர். பின் ஒவ்வொரு முறையும் அவனையே நாடுவோம்.

மேலும் இது தவிர சனிக்கிழமை போடப்படும் கிந்தி படம், ஞாயிறு காலை ஒளிபரப்பாகும் கார்டூன் மற்றும் ஜனதா நகர் காலனி என்ற தொடர், கிந்தியில் ஒளிபரப்பாகும் ராமாயணம், மகாபாரதம் போன்ற நெடிய தொடர்கள், வார நாட்களில் ஒளிபரப்பாகும் ரயில் சிநேகங்கள், நீலா மாலா, இவளா என் மனைவி, தாயுமானவன், என் இனிய இந்திரா போன்ற சிறு தொடர்கள் பிரசித்தி பெற்றவை.

வசந்தம் - 2 (சினிமா, வீடியோ, டெக்)

இன்று புதிய படங்களை, திருட்டு dvd மூலமாகவும், இணைய தளங்கள் மூலமாகவும் உடனுக்குடன் பார்ப்பது எளிதாக உள்ளது. ஆனால் அப்போது நிலைமை வேறு. வீடியோ டெக் மற்றும் கேசட் மூலமாக மட்டுமே பார்க்க முடியும். ஆனால் அந்த உபகரணங்கள் எங்கள் பகுதியில் யாரிடமும் இருக்காது. எனவே புதிய படங்களை திரை அரங்கில் சென்று மட்டுமே பார்க்க முடியும். ஆனால் எங்கள் ஊருக்கு படம் உடனே வராது. பெரு நகரங்களில் ஓடி தேய்ந்து பின் 3 மாதம் கழித்தே இங்கு வரும்.இதற்கு இடையில் வெளியூர் செல்லும் ஒருவன் தப்பி தவறி ஒரு புதிய படத்தை பார்த்து விட்டால் போதும்.

ஒரு வாரத்திற்கு அந்த படத்தை காட்சி, காட்சியாக விவரிப்பான். அதை கேக்குறதுக்கு எப்போதுமே அவனை சுத்தி ஒரு கூட்டம் இருக்கும். அவனும் வெறுமனே கதையை சொல்வதோடு மட்டும் அல்லாமல் நடித்தே காட்டி விடுவான். அப்போது எல்லாம் எங்களுக்கு தெரியாது அது ஒரு நல்ல திறமை என்று. இன்னிக்கு you tube சேனல்ல திரை விமர்சனம் செய்வது நல்ல வியாபாரமாக உள்ளது.

இப்படி எல்லாம் ஒரு படத்தை பார்ப்பது என்பது அரியதாக இருக்கும் சூழ்நிலையில், எங்களுக்கு எல்லாம் ஒரு இனிப்பான விஷயம் என்ன வென்றால் கோவில் திருவிழா.

ஒவ்வொரு திருவிழாவின் போதும் பொது மக்களிடம் காசு வசூல் செய்து விமரிசையாக கொண்டாடுவார்கள். அதில் வீடியோ டெக் வாடகைக்கு எடுத்து படங்கள் ஒளிபரப்பும் நிகழ்வும் உண்டு. பொதுவாக இரவு 9 மணிக்கு தெருவின் மத்தியில் டிவி, டெக் வைத்து 3 படங்கள் வரை போடுவார்கள். ஒன்று புதுசு. ஒன்று பழசு. ஒன்று பக்தி படம்.அன்றைய தினம் காலையில் இருந்தே அதே பேச்சாக இருக்கும்.

என்ன படம் போடுவார்கள் என்ற சவாலான கணிப்பு அனைவரிடமும் இருக்கும். இங்கும் அதே போல முன் கூட்டியே இடம் பிடிக்கும் படலம் அரங்கேறும். ஆண், பெண், வயதானவர்கள், சிறுவர்கள் என்ற பேதம் இன்றி விடிய விடிய கண்டு ரசிப்பார்கள். நான் பல படங்களை அரை தூக்கத்தில் பார்த்து அடுத்த நாள் என்ன படம் பார்த்தோம் என்ற ஞாபகம் இன்றி இருந்த கதைகளும் உண்டு. இது போல ஊரில் எந்த மூலையில் படம் போட்டாலும் எங்களுக்கு செய்தி வந்து விடும். பள்ளி நண்பர்கள் மூலம். அங்கும் சென்று பார்ப்போம். அடுத்த நாள் பள்ளியில், பார்த்த படங்களின் கதை சொல்லும் படலம் அரங்கேறும்.

வசந்தம்-3 (விளையாட்டு)

அப்போது இணையதளம் இல்லை. அலைப்பேசி இல்லை. வீடியோ விளையாட்டுகளும் இல்லை. தொலைக்காட்சியையும் எப்போதும் பார்க்கும் அளவிற்கு நிகழ்ச்சி நிரல்கள் கிடையாது.

பின் வேறு என்ன பொழுது போக்கு?
விளையாட்டு தான்.

எத்தனை எத்தனை விளையாட்டுகள். அப்போது எல்லாம் பள்ளி விடுமுறை விட்டாலே தெருவாசிகள் அச்சப்படுவார்கள். 20 பேர் எந்நேரமும் தெருவில் கூச்சலோடும் அதிரடியாகவும், ரகளை செய்துக் கொண்டு காலை முதல் மாலை வரை விளையாடிக் கொண்டே இருந்தால் எப்படித் தாங்குவார்கள்.

கிரிக்கெட் தவிர வேறு பல நம் மண்ணின் விளையாட்டுகளும் விளையாடியதுண்டு. பம்பரம், கோலி (பளிங்கு), ஏழு கற்கள் (seven peter), கபடி, ஓடிப்புடிச்சி, நொண்டி கோடு (ஒற்றை காலால் ஓடிப்புடிச்சு), பாண்டி(சில்லு கோடு), கிட்டி பில், நாடு பிடித்தல் என வெளிப்புற விளையாட்டுகளும்.

பல்லாங்குழி, பரம பதம், தாயம், சதுரங்கம், கேரம் போர்டு, திருடன் போலீஸ், சீட்டுக் கட்டு போன்ற உட்புற விளையாட்டுகளும் விளையாடுவோம்.

வெளிப்புற விளையாட்டுகள் இருட்டும் வரை தொடரும். இருட்டிய பின்னும் தொடரும். அதற்கு என்று ஒரு விளையாட்டு உண்டு. ஐஸ் பாய் என்று அழைக்கப்படும் ஒளிஞ்சு புடிச்சு என்னும் சாகச விளையாட்டு. ஒளிந்து கொள்ளும் ஒருவரை மற்றொருவர் பிடிப்பதில் என்ன சாகசம் இருக்கிறது என்று கேட்கலாம். இருக்கே, ஒளிந்து கொள்பவர்களுக்கு மரம் ஏற தெரிய வேண்டும். மாடிக்கு மாடி தாவ தெரிய வேண்டும். இருளில் பாம்பு, பூச்சி பயம் இல்லாமல் புதருக்குள் ஒளிந்து கொள்ளும் தைரியம் இருக்க வேண்டும். இப்ப நினைச்சா கொஞ்சம் பயமா தான் இருக்கு.

மேற்குறிப்பிட்டது போல அனைவரும் கூடி விளையாடும் விளையாட்டே சிறந்தது. ஒரு கூட்டு மனப்பான்மை, ஒற்றுமை உணர்வு, போராடும் குணம், தைரியம், தோல்வியை தாங்கி கொள்ளும் மனப்பக்குவம் இவற்றை எல்லாம் வளர்க்கும்.

ஆனால் இன்று செயற்கையாகத் திரையில் விளையாடும் வீடியோ விளையாட்டுகள்

குழந்தைகளின் மன நலம், கண் பார்வை, முதுகெலும்பு, உடல் ஆரோக்கியம் இவற்றை பாதிக்கிறது. வன்முறை எண்ணத்தை வளர்க்கிறது. ப்ளூ வேல் போன்ற விளையாட்டுகள் அவர்கள் உயிரையும் பறிக்கின்றன. அவர்களை பார்க்கும் போது பரிதாபமாக தான் உள்ளது.

வசந்தம் - 4 (தின்பண்டம்)

இன்றைய குழந்தைகளுக்கு நினைத்ததுக் கிடைத்து விடுகிறது உடனே. அவர்கள் விரும்பும் உணவுகள் பரோட்டா, நூடுல்ஸ், பர்கர், பீட்ஸா என கேட்டவுடன் கிடைத்து விடுகிறது. வீட்டில் ஒரு நாயை வளர்ப்பது போல் தான் அது. வேண்டும் உணவை வாங்கி தந்து வளர்ப்பார்கள்.

ஆனால் அப்போது எல்லாம்  நாங்கள் ஒரு சிங்கம் போல் எங்களுக்கு தேவையான உணவை நாங்களே தேடி அலைந்து திரிந்து பெறுவோம். அந்த தேடலில் கடின உழைப்பும் அதிக ஆபத்தும் உள்ளது. தேடல் கூட ஒரு சுகம் தானே. தேடல் என்பது உள்ளவரை தினமும் பசி எடுக்கும், தேடல் என்பது உள்ளவரை மட்டுமே வாழ்வில் ருசி இருக்கும் என்று ஒரு தமிழ்ப் பாடலில் வருவது போல.

நெல்லிக்காய், மாங்காய், புளியங்காய் இந்த மூன்று காய்களும் புளிப்பு சுவை உடையவை. உண்பதற்கு அவ்வளவாக சுவையாக இருக்காது. இருந்தாலும் அதைப் பறிக்க உயரமான மரத்தின் மீது திருட்டுத்தனமாக ஏறி அதைப் பறித்து உப்புத் தொட்டு உண்ணும் போது தான் தெரியும் திருட்டு மாங்காய் மட்டும் அல்ல, திருட்டு புளியங்காய் கூட ருசிக்கும் என்று. ஆனால் அது அவ்வளவு எளிதாகக் கிடைத்து விடாது. சில சமயம் மரத்தில் இருந்து விழுந்தும் இருக்கிறார்கள். அந்த அனுபவம் எனக்கும் ஒரு நெல்லி மரத்தில் ஏறிய போது நடந்தது.

இவை தவிர நாவல் மரம், இலந்த மரம் ஏறி அந்த பழங்களையும் ருசித்தது உண்டு. பள்ளிகளில் கண்ணாடி பாட்டில்களில்  மிட்டாய் விற்பனை செய்யும் சிறு தொழில் வியாபாரிகளிடமிருந்து வாங்கி உண்ணும் உணவுகளான ஜவ்வு மிட்டாய் (தமிழ் நாட்டு chewing gum), கமர் கட் என்னும் பற்களுக்கு சவால் விடும் மிட்டாய், ஈச்சம் பழம், வெள்ளரி பிஞ்சு, கொடுக்கா புளி பழம் என இயற்கையில் கிடைக்கும். நம் மண்ணின் பாரம்பரிய உணவுகளை உண்டு மகிழ்ந்தோம். அதனால் தான் என்னமோ அப்போதைய குழந்தைகள் பெரும்பாலும் உடல் இளைத்து ஒல்லியாகவே இருந்தார்கள். தற்போதைய குழந்தைகளுக்கு உள்ளது போல் உடல் பருமன் வியாதி இருந்ததில்லை. 7 வயது குழந்தைகளுக்கு கூட இப்போது தொப்பை வந்து விடுகிறது.

இதற்கு காரணம் நம் அவசர வாழ்க்கை முறையும், தவறான உணவு முறையும் தான்.

இப்போது சொல்லுங்கள் அது ஒரு வசந்த காலம் தானே.

- செந்தில் பக்கிரிசாமி
மன்னார்குடி

# அன்புள்ள ஆத்தா



- மன்னை ரஞ்சித்

மழலை மொழிக் கற்றுத் தந்தாய்
மலை அளவு பாசம் தந்தாய்

விளையாட வெளியே சொல்லாமல் சென்றால்
அப்படி அடிப்பாய்

அடித்த மறுகணமே
அணைத்துக்கொண்டு அழுவாய்

அடிவாங்கியத் தோலுக்கும்
அடிக் கொடுத்த கம்புக்கும் தான் தெரியும்
இது வலியை ஏமாற்றும் வேலையென

நேரம் பார்க்காமல் முழித்திருந்தாய்
நான் தூங்கும் நேரம் இதுதான் என்று

கணக்கு பாடம் படித்ததில்லை நீ ஆனால்
என் மனக்கணக்கை கரைத்து குடித்திருந்தாய்

உனக்கான வேலை இருந்த போதும்
என்னை வளர்ப்பதையே
முழு நேர வேலையாய் இருந்தாய்

உன் பசியை நீ அறிவாயா
என தெரியவில்லை
என் பசியை நீ அறிவாய்

தாய் பாசமும்
தந்தை பாசமும்
ஒன்றாய் கொடுத்தாய்
தன்னலம் பாராது எனக்காய் வாழ்ந்தாய்

அடுத்த பிறவி உண்டெனில்
நீ எனக்கு மகளாய் பிறப்பாய்
நீ காட்டியப் பாசத்தை
நான் காட்ட

# 18+


பாலாஜி சுதந்திரராஜன்
மன்னார்குடி

இந்த தலைப்பை பார்த்தவுடனே உங்களுக்கு என்ன தோன்றியதோ கண்டிப்பாக அதைப் பற்றியது இல்லை இந்தக் கட்டுரை.

நீங்கள் நினைத்ததும் முக்கியமான ஒன்று தான். ஏனென்றால், இன்று பலருக்கு அதன் மீது அறிவியல் ரீதியான புரிதலும் விழிப்புணர்வும் இல்லை என்பது தான் உண்மை. எனினும் அதைத் தாண்டி பல விடயங்கள் உள்ளது நாம் 18 வயதில் கற்க.

ஆம் 18 வயது என்பது ஆண் பெண் பாகுபாடின்றி வாழ்கையில் மிக முக்கியமான ஒரு கட்டம். அந்த கட்டத்திற்கு பிறகு நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் நம் வாழ்க்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்தலாம். ஏன் வாழ்கையையே கூட மாற்றலாம். நமது வாழ்க்கையை மட்டுமல்ல நம்மை சார்ந்து இருப்பவர்களின் வாழ்க்கையையும் தான்.

அதுமட்டுமல்ல 18 வயதுக்கு பிறகு நமக்கென சில உரிமைகளும் பொறுப்புகளும் உருவாகும் அல்லது உருவாக்கப்படும். அவைகளை கையாளவும் வாழ்க்கையோடு ஒன்றி எடுத்துச்செல்லவும் தெரிந்து வைத்திருப்பது மிகவும் அவசியம். அவற்றுள் சிலவற்றை பற்றி இங்கு அலசுவோம்.

18 வயது.
நாம் அனைவரும் கல்லூரி செல்லும் காலம். ஒவ்வொருவரும் ஒரு துறையின் ஆரம்ப கல்வியை கற்றுக்கொண்டு இருப்போம்.

நமது பள்ளி பருவத்தில் பணம் கட்டுவது முதல் தேர்வு முடிவு வரை நமக்கு பெற்றோரின் துணை அதிகமாக தேவைப்படும்.

ஆனால் கல்லூரிக் காலத்தில் அப்படி எதுவுமே இருக்காது. பெரும்பாலும் பணம் செலுத்துவதும் நாமே, தேர்வு முடிவை இணையத்தில் பார்ப்பதும் நாமே. சொல்லப்போனால் நாம் படிக்கும் கல்லூரியில் நம் பெற்றோர்களின் நிழல் கூட படாது.

அதுவரை நமக்கு அறிவுரைக் கூறிக்கொண்டு இருந்த பெற்றோர்களும் உறவினர்களும் நமது யோசனையையும் கேட்க ஆரம்பித்து இருப்பார்கள்.

இந்த சமயத்தில் தான் நமக்குள் ‘‘நமக்கு எல்லாம் தெரியும்’’ என்ற கர்வம் ஏற்படும். இந்த எண்ணம் தான் நம்மை ஒரு எல்லைக்குள் அடைக்கிறது. அதைத் தாண்டி யோசிப்பதும் இல்லை.

18 வயதில் நமக்கான உரிமைகளுள் சில:

வாகனத்தை சுயமாக ஓட்ட ஓட்டுனர் உரிமம், வங்கி கணக்கை துணையின்றி கையாளும் உரிமை, வாக்களிக்க ஓட்டுரிமை, தேர்தலில் போட்டியிட வேட்பாளர் உரிமை, பல அரசு தேர்வு எழுதுவதற்கான தகுதி...

இப்படி பல உரிமைகள் உள்ளன இவற்றுள் முக்கியமான ஒன்றாக நான் கருதுவது ‘‘ஓட்டுரிமை’’.

ஆம், இன்று ஓட்டுப் போட்டுவிட்டு மை வைத்த விரலோடு ஒரு செல்ஃபி எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவதோடு சரி நம் கடமை முடிந்தது என்று நினைத்துக்கொள்கிறோம்.

அதுவே ஒரு திரைப்படம் வெளியாகிறது என்றால் அதைப் பற்றிய கருத்துக்களையும் விமர்சனங்களையும் பார்த்து, படித்துவிட்டு செல்பவர்கள் பலர் இருந்தாலும், தான் விரும்பிய நடிகனின் படம் எப்படி இருந்தாலும் டிக்கெட் விலை எவ்வளவு இருந்தாலும் முதல் நாள், முதல் காட்சி பார்ப்பவர்களும் பலர் இருக்கிறோம்.

இப்படிதான் தேர்தலும் அரசியலும். தேர்தலில் போட்டி இடுபவர் மேல் எவ்வளவு குற்றங்கள், வழக்குகள் இருப்பதை அறிந்து அதற்கு ஏற்றார் போல் நல்ல வேட்பாளர்களை தேர்வு செய்து வாக்களிப்பவர்கள் சிலர் இருந்தாலும், தன் இனத்தவர், கட்சிக்காரர், ஊர்க்காரர் என்ற குருட்டு நம்பிக்கையுடன் பலர் அந்த குற்றம் நிறைந்த வேட்பாளருக்கே வாக்களிக்கத்தான் செய்கிறோம்.

இதை திரைத்துறையில் ஏற்றுக்கொள்ளலாம் ஆனால் அரசியலில் அப்படி ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் சினிமா என்பது தொழில், அரசியல் என்பது சேவை.

இந்த புரிதல் இல்லாததால் தான், நல்ல தலைவர்கள் களத்தில் இருந்தாலும் கூட நம்மில் பலர் நமக்கான தலைவர்களை திரையில் தேடுகிறோம்.

திரையில் ஒரு நடிகனோ நடிகையோ மக்களுக்கு நல்லது செய்வது போல் நடித்திருப்பார்கள். ஏனெனில் கதைக்கான களம் அது. அதில் அவர்கள் அப்படித் தான் ‘நடித்தாக’ வேண்டும். ஆனால், அதுவே அவர்களின் உண்மை முகம் அல்ல என்ற புரிதல் நமக்கு மிகவும் அவசியம்.

இன்றைக்கு சில நடிகர்கள் திடீரென அரசியலுக்கு வருகிறார்கள். ஏனென்று பார்த்தால் திரைத்துரையில் தன்னுடைய காலம் முடியும் போது தனக்கான அந்த நட்சத்திர தரத்தை தக்க வைத்துக்கொள்ள பதவியை தேடுகிறார்கள். இவர்கள், தான் நடிகனாக நன்கு சம்பாதித்த போது மக்களுக்காக என்ன செய்தார்கள்? எதற்கு போராடினார்கள்? என்று யோசித்து பாருங்கள் உங்களுக்கே புரியும்.

சரி இவர்களை விடுங்கள் நாம் ஓட்டுக்கு வருவோம். நாம் ஒவ்வொருவரும் ‘என்னுடைய ஒற்றை ஓட்டா பெரிய மாற்றத்தை ஏற்படுத்த போகிறது?’ என்று நினைப்போம்.

ஆனால் ஒரு ஓட்டு என்பது நமக்கானது மட்டுமல்ல,

நமக்கு உணவு விளைவிக்கும் விவசாயி,
தினமும் நம்மை அலுவலகத்தில் விடும் ஓட்டுனர்,
நாம் ஆரோக்கியமாக வாழ வழிவகுக்கும் துப்புரவு தொழிலாளி,
நம் வீட்டுக்குச் செய்தித்தாள் போடுபவர், கூவத்தில் குடியிருக்கும் மக்கள், உயர் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் வைத்தியம் பார்க்க காசில்லாமல் அரசு மருத்துவமனையில் அந்த தொழில்நுட்பம் இல்லாமல் உயிர் பிழைக்க போராடுபவர், தாகம் தனிக்க பல கி.மீ தொலைவில் சென்று குடிநீர் கொண்டு வரும் மக்கள், இன்றும் மின்சாரம், சாலை, போக்குவரத்து, பள்ளிக்கூடம் இப்படி எந்த வசதியுமே இல்லாத கிராமங்கள்,
சிறு மழைக்கே வெள்ளத்தில் சிக்கி தவிக்கும் சரியான கட்டமைப்பு வசதி இல்லாத மாநகரங்கள், அதிகாரம் பிடுங்கப்பட்ட அதிகாரிகள்,
சேவை மறந்த அரசியல்வாதிகள்,
விழிப்புணர்வு இல்லாத மக்கள் என இப்படி பல பேர் தொடர்புடையது.

இதே போல் தேர்தல் வாக்குறுதி என்பது இலவசங்கள் மட்டுமே அடங்கியதாக இருந்தால் அதை நாம் ஏற்றுக்கொள்ளுதல் கூடாது.

மக்கள் நலன் சார்ந்த மேம்பாட்டு திட்டமும் நிறைந்து இருத்தல் அவசியம்.
ஓட்டுக்கு பணம் வாங்குவதும் வழங்குவதும் அப்படிதான்.

இதற்கு நாம் அடங்கி போனால் 5 வருடங்களுக்கு அமையப்போவது நமக்கான ஆட்சி அல்ல. அந்த 5 வருடம், தேர்தலில் செலவு செய்தவர்கள் காசு சம்பாரிக்கும் தொழிலாக தான் இருக்கும்.

இனிமேலாவது வாக்களிக்கும் முன் ஒருமுறைக்கு பலமுறை வேட்பாளர்களைப் பற்றியும் அவர்களது வாக்குறுதிகளையும் நன்கு அறிந்து தெளிவுப் பெற்று வாக்களிப்போம்.

இதற்கு மேலும் நான் சுரண்டி தின்னும் கட்சிகளுக்குத் தான் வாக்களிப்பேன் என்றால், தயவு செய்து தேர்தல் நடக்கும் அன்று ஒரு நாள் மட்டும் உறங்கிவிடுங்கள். உங்கள் உறக்கத்தால் நாடு ஒளிரட்டும்.

அடுத்த இதழில் வேறு தலைப்புடன் உங்களை சந்திக்கிறேன்.

நன்றி.

- பாலாஜி சுதந்திரராஜன்
மன்னார்குடி

# பணப் பித்தம்

பணம் என்ற மூன்று வார்த்தை
மனிதனை முட்டாளாக்கி விட்டதடா...

பாசம் என்ற சொல்லும்கூட வேசமாகி போனதடா...
அம்மா அப்பா பந்தம்கூட பாதி தோற்றுப் போனதடா...
பசி வந்த நேரத்திலும் காசு தேவையானதடா...

அரைகுறையாய் தைத்த சட்டைக்கூட ஆயிரம் காசு விற்குதடா
காசு பணம் பேசும் இடத்தில் மனம் பேச மறுக்குதடா..

தொல்லை சுற்றும் பூமியிலே வாழ பணம் இல்லையென்றால்
இங்கே பிணம் தானோ..?

மனிதா காசு பணம் வந்தால் மரக்கலண்டு ஆடாதே
பணம் போனால் திரும்பிவர வாய்ப்புண்டு
உயிர் போனால் பிறகு பிணமாய்...

கத்தியின்றி, இரத்தமின்றி என்ற வாழ்வு போய்
காசுயின்றி சோறில்லை
என்ற வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டிருக்கும் மனிதனே...!

மனிதனாய் வாழ்க்கையை வாழ தொடங்கு
நீயும் பாசமிக்க மனிதனாவாய்.

- S. அபிநயா

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!!
தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322** **http://maintharkal.mannai.in**